பக்கங்கள்-16 | மாசி 16,2014 | விலை-30.00

**விளம்பரங்கள்**

அனைத்துவகையான விளம்பரங்களையும் பிரசுரிக்க நாடுங்கள்...

தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

**அன்பான வாசக நெஞ்சங்களே**

எமது தினப்புயல் பத்திரிகை தொடர்பான அனைத்து விமர்சனங்களையும், ஆக்கங்களையும் வரவேற்கின்றோம்.

மலர்-01 | Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885 Email:tthinappuyalnews@yahoo.com | இதழ் - 72

## ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் அதிநவீன குண்டுகளை பிரபாகரன் பாவிக்காதது ஏன்?

## அமெரிக்கா இலங்கையில் தளம் அமைக்க மஹிந்தவுடன் பேரம் பேசுகிறது

## மேல்மாகாணசபைத் தேர்தலில் மனோகணேசன் வெற்றி உறுதியா? இல்லையா?

## மாவை, சுரேஸ், அரியநேந்திரன், சிறிதரன் தாயக உணர்வுடன் வெளிநாட்டில் உரை...




HOTEL INDRAN'S


TAKE A BREAK




No.40/5
Station view
Vavuniya,Srilanka

Tel:0242226420
Mobile:0773382771
Fax:0244925938
E-mail: indransrestinn@live.com

# ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் அதிநவீன குண்டுகளைப் பிரபாகரன் பாவிக்காதது ஏன்?





இலங்கையரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய படைநகர்வென்றை கடந்த நான்கு வருடங்களுக்கு முன் 2009 காலப்பகுதியில் மும்முனைத்திறப்புடன் வலிந்த தாக்குதலாக நடத்தியிருந்தது. மாவிலாறில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் முள்ளிவாய்க்காலில் நிறைவுபெற்றது. ஆனால் ஏற்கனவே தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் அரசாங்கத்துடனும் சமரப் பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஐ.நா சபை செயலாளர் நாயகம் யதூசி அக்காசி, எரிக் சொல்ஹெய்ம் உட்பட பல்வேறு நாடுகளின் ராஜதந்திரிகள் இலங்கையின் நடைபெற்றுக்கொண்டிருந்த போரை முடிவுக்கு கொண்டு வர முயன்றனர். காரணம் தற்கொலை தாக்குதல்களை விடுதலைப்புலிகள் மட்டுமல்ல உலக அரங்கிலும் எவருமே இத்தகைய செயற்பாடுகளைச் செய்யக்கூடாது என்ற முக்கிய நோக்கமே.

அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய ஓசாமாபின்லேடன் இரட்டைக் கோபுரம் மீது தாக்குதல் நடத்தியபோதே அதாவது தற்கொலை தாக்குதல்களில் ஈடுபடுபவர்கள், அமைப்புக்கள் அனைத்தையுமே ஓரம்கட்ட, தடைசெய்ய அமெரிக்கா முழுமுயற்சி எடுத்தது. அதனொரு கட்டமாகவே கடல், வான், தரை, தற்கொலைப்படை என வளர்ந்து வந்திருந்த விடுதலைப் புலிகளின் கட்டமைப்பு மற்றும் பிரபாகரனின் தலைமைத்துவம் இலங்கை நாட்டுக்குள் இருக்கக்கூடாதென்று ஐ.நா சபை மற்றும் உலக நாடுகள் ஒட்டுமொத்தமாக தீர்மானம் எடுத்துக்கொண்டதன் விளைவே இவர்களது போராட்டம் ஓரம்கட்டப்பட்டதற்கு பிரதான காரணமாகும்.

இதன் காரணத்தால் தமிழீழ விடுதலைப்புலிகள் பன்னாட்டுப் படைகளுடனும் சண்டையிட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பல நாடுகளையும் எதிர்த்துப் போரிட்டார்கள். இப்போரின் போது அறுபதினாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவப் படையினர் கொல்லப்பட்டதுடன் இருபதாயிரத்துக்கு மேற்பட்டோர் அங்கவீனர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு சதந்திரதினத்தின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெளிவாக ஒன்றைச் சொல்லியிருந்தார். அதாவது நடந்து முடிந்த பிரச்சினைகள் நடந்து முடிந்ததாகவே இருக்கட்டும். உயிரிழப்புக்களை தவிர ஏனைய அனைத்தும் கட்டியெழுப்பப்படும். இன்னும் ஒரு அபாயகரமான யுத்தம் வேண்டாம். நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்ற அடிப்படையில் சுதந்திரமான இலங்கைக்குள் வாழவேண்டும் என்றிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வெளிப்படையாக இலங்கைவாழ் மக்களுக்கு சாதகமான அணுகுமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும்கூட புத்தபிக்குகள் ஒருபோதும் தமிழர்களுக்கான தீர்வினை உரிய முறையில் பெற்றுக் கொடுப்பதற்கு விடமாட்டார்கள். அவ்வாறு விட்டுக்கொடுத்த வரலாறுகளுமில்லை.

ராஜதந்திர ரீதியிலாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான பன்னாட்டுப் படைகளின் யுத்த அணுகுமுறைகள் விடுதலைப்புலிகளுக்கு ஒரு பாடமாக அமைந்தாலும் கூட உலக நாடுகள் அதுவும் குறிப்பாக வல்லரசு நாடுகள் இலங்கை மீது போர் தொடுத்தது என்றால் பிரபாகரனின் போராட்டத்தின் வலிமையை நாம் அறிந்து கொள்ளலாம். கருணா பிரபாகரனை விட்டுப் பிரிந்த பின்னர் ஆயுதக்குழுக்களின் அதிகாரங்கள் கையோங்கி நின்றன. அரசாங்கம்தமிழ்மக்களையேதமிழ்மக்கள் மீது ஏவிவிட்டு தமிழ்மக்களுக்குள்ளேயே பிரிவினையை ஏற்பட்டு தம்மினமே தம்மினத்தைச் சுட்டுக்கொல்லும் வரை வேடிக்கை பார்த்துப் கொண்டிருந்தது. இவ்வாறாக தமிழ்மக்களுடைய பிரச்சினை இருந்து வந்ததன் காரணமாகவே பிரபாகரன் ஒரு முடிவுக்கு வந்தார். அனைத்துப் போராளிகளையும் இறுதிநேரத்தில் வரவழைத்து எமது தாயகம் காட்டிக்கொடுக்கப்பட்டு விட்டது. நாம் இன்று பல நாடுகளோடு போராடிக்கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் சோர்வடைந்து போகக்கூடாது. "நான் சாகலாம் நாங்கள் சாகக்கூடாது" என்று பேசியிருந்தார்.

## விடுதலைப்புலிகளின் அதிநவீன ஆயுதம்

விடுதலைப்புலிகள் அதிநவீன ஆயுதங்களை வைத்திருந்தும் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஏன் அவற்றைப் பயன்படுத்தவில்லை என்று பார்க்கும்போது, அவ்வாயுதங்களை மட்டும் பயன்படுத்தியிருந்தால் வன்னிப்பெருநிலப்பரப்பு முற்றாக அழிந்துவிடும் என்ற காரணத்தால் தான் விடுதலைப்புலிகள் பயன்படுத்தவில்லை. படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள இக்குண்டுகளைவிட மேலதிகமாக பல இருந்ததாக புலனாய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இக்குண்டுகளைப் பயன்படுதியிருந்தால் உண்மையில் ஒவ்வொரு மாவட்டத்தையும் இலகுவாக கைப்பற்றியிருக்க முடியும். ஆனால் இவ்வாறான குண்டுகளைப் பிரபாகரன் பயன்படுத்தியிருந்தால் முன்பைவிட சர்வதேச நாடுகளின் கண்டனங்களுக்கு இன்னமும் உள்ளாகியிருக்க வேண்டும்.



இராணுவத்தினரிடமோ அல்லது அயல்நாடுகளிடமோ இவ்வாறான இராட்சத குண்டுக் இருந்திருக்கவில்லை. இறுதிக்கட்டத்தின் போது இவற்றை இயக்கக்கூடிய ஆளணிவளமும் இருந்திருக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

அக்காலகட்டத்தின்போது விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல் 8 சர்வதேச கடற்பரப்பில் நிர்மூலமாக்கப்பட்டிருந்தமை நாமறிந்ததே. அவற்றில் இந்தியாவிலிருந்து வந்த கப்பல் ஆயுதக்கப்பல் என்று அரசதரப்பு கூறியிருந்தாலும் அதில் மருத்துவ, அவசர தேவைக்கான ஆகாரங்களுமே இருந்தன. இக்கப்பலில் வந்த மருந்துகள் பலவற்றை அக்காலகட்டத்திலிருந்த மருத்துவர்கள் கொள்ளையடித்த சம்பவங்களும் பதிவாகியுள்ளது. இவர்கள் யார் என்று பார்க்கின்றபோது தற்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலும் வடமாகாண சபையிலும் அங்கத்தவர்களாக உள்ளவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயம்.

போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகளே விசவாயுக்களை பயன்படுத்தினர் என்றும் இராணுவத்தினர் அல்ல என்று போர்க்களத்தில் நின்ற சரத் பொன்சேகா அவர்கள் 2008.11.09 அன்று தெரிவித்திருந்தார். இப்போர் நடவடிக்கையின் போது சரத் பொன்சேகா அவர்கள் விடுதலைப்புலிகளின் இறுதி இடமாகிய முள்ளிவாய்க்கால் பகுதி வரை கொண்டு சென்றிருந்தார். இப்பகுதி இருபது கிலோமீற்றர் சுற்றுவட்டத்துக்கள் உள்ளடக்கப்பட்டது. விடுதலைப்புலிகளும் பொதுமக்களும் சேர்ந்திருந்த காரணத்தால் யார் புலிகள் யார் பொதுமக்கள் என்று இனங்காண முடியாத அளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது. இச்செய்தியினை மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் சரத் பொன்சேகா அவர்கள்தெரிவித்திருந்தபோதுநிலைமை இப்படி இருக்கிறது அடுத்த கட்டம் என்ன செய்வது என்று வினாவிய போது களத்திலிருந்து உடனே சரத் பொன்சேகா அவர்கள் தலைநகருக்கு அழைக்கபட்டு சீனாவுக்கு சென்று வர உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன்போது மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் கோட்டபாய இராணுவப் பொறுப்பை ஏற்றார். எஞ்சியிருக்கும் இப்பகுதியையும் முற்றாக அழித்து விடுமாறு பணிக்கப்பட்டார். இதன்போது யார் யார் சாகிறார்களோ அதைப்பற்றிக் கவலையில்லை. இத்துடன் போர் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்று பொன்சேகா முடிவெடுத்தார்.

கூடியபாகம் பார்க்கின்ற போது இப்போரின் வெற்றிக்கு சரத்பொன்சேகாவே காரணமாக இருந்தார். முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இரசாயன ஆயுதத்தை வைத்திருந்தார்கள் என்று இராணுவம் கூறியிருந்தாலும் இவற்றை ஏன் பாவிக்க வில்லை என்பதில் சந்தேகம் தோன்றுகின்றது.

தமிழீழவிடுதலைப்புலிகள் 1990ஆம் ஆண்டே யாழ்ப்பாணம் கோட்டையைத் தாக்கியபோது அவர்கள் உருவாக்கிய பசீலன் செல் 200 என்ற குண்டைப் பயன்படுத்தியிருந்தனர். அக்குண்டின் அதிர்வால் கோட்டையிலிருந்த இராணுவம் தாமாகவே புறப்பட்டு மண்டைதீவுக்கு சென்றது. இதனால் கோட்டை புலிகளின் வசமானது. அக்காலத்திலிருந்தே தமிழீழவிடுதலைப்புலிகள் குண்டுகள் மற்றும் ஆயுதங்களைத் தயாரிப்பதில் தலைசிறந்து விளங்கினர்.

விடுதலைப்புலிகள் தயாரித்த நீர்மூழ்கிக் கப்பல்கள், டோராப் படகுகள், தன்னியக்கத்துப்பாக்கிகள் என்பனவும் தற்போது முல்லைத்தீவில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. ஆயுதஉற்பத்தியிலும் அனைத்து கட்டமைப்புக்களிலும் தாம் சிறந்தவர்கள் என்பதைக் காட்டுவதாகவே இவ்விடயம் அமைந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் இராணுவத்தரப்பினரிடம்கூட இப்படியானசெல்கள் இல்லை. இராணுவம் பயன்படுத்தியது மல்ரி பெரல்கள் மாத்திரமே. நவீனமானது என்று குறிப்பிடலாம். கொத்துக்குண்டை பாவித்ததாக கடந்த வாரம் மன்னார் ஆயர் அடித்துக் கூறியிருந்தார்.

இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரசுக்கு அதிநவீன சட்டலைட் தொழிநுட்பங்கள், மற்றும் கொத்துக்குண்டுகள், உளவறியும் விமானங்கள் என்பனவற்றை வழங்கியிருந்தன என்பது அக்காலகட்டத்தில் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்தது. தற்கொலைப்படையை பிரபாகரன் வைத்திருந்த காரணத்தால் எல்.ரி.ரி.ஈ அமைப்பினர் உலகநாடுகளால் ஓரங்கட்டப்பட்டது மட்டுமல்லாது பிரபாகரனின் தலைமைத்துவமும் மறுக்கப்பட்டு இன்று பிரபாகரன் அல்லாத தலைவர் ஒருவரை உருவாக்கி தமிழ்மக்களுக்கான சமஷ்டி ஆட்சியை உருவாக்குவதில் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே போன்ற நாடுகள் முயற்சித்து வருகின்றன. அதனொரு கட்டமாகவே இம்முறை நடைபெற இருக்கும் சர்வதே நாடுகளின் மனிதஉரிமை மகாநாடு அமையப்பெறுகிறது. விடுதலைப்புலிகள் ஒரு நாட்டின் கட்டமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு ஏற்ப தம்மை பலப்படுத்தி வைத்திருந்தனர். பிரபாகரன் நினைத்திருந்தால் அதிநவீன சக்திவாய்ந்த குண்டுகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்தியிருக்கலாம். பல குண்டுகள் இன்னும் மண்ணுக்குள் புதைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே இவற்றை வைத்துப் பார்க்கும் போது தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை பாவித்தால் போராட்டத்துக்கும், தனக்கும் சர்வதேச அளவில் அவப்பெயர் ஏற்படும் என்று கருதியிருப்பார் என்று பல்நாட்டு அரசியல்அவதானிகளும் கூறுகின்றனர்.

இரணியன்

ஜீவப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, [illegible],
தேக்கவத்தை, வவுனியா.

## இலங்கை மீது உலக நாடுகளின் வல்லாதிக்கம்

இலங்கை தொடர்பில் ஜெனீவாவில் சர்வதேச விசாரணை அவசியமெனும் நோக்கில் அமெரிக்காவால் முன்வைக்கப்படவிருக்கும் தீர்மானம் பற்றிய பேச்சுக்கள் அரசியல் அரங்கில் இப்போது இலங்கையை ஆட்டங்காண வைத்துள்ளது. இம்முறை மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளின் பெரும்பான்மை ஆதரவுடன் இலங்கை தொடர்பிலான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவுள்ளது. இதேவேளை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களினாலும் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. இவ்வறிக்கைக்கு சனல்4 ஊடகவியலாளர் கலம் மக்ரே, தருஸ்மன் குழுவின் யாஸ்மீன் சூகா, பி.பி.சி ஊடகவியலாளர் பிரான்சிஸ் ஹரிசன், முன்னாள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரி கோர்டன் வைஸ், சார்ள்ஸ் பெட்ரீ ஆகியோர் ஆதரவளித்துள்ளனர்.

இதுபோல போர்க்குற்றச் செயல் தொடர்பிலான விசாரணைகளுக்கு முழு அளவில் ஆதரவளிக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியமும் தெரிவித்துள்ளது. இவ்வேளையில் ஆசிய–பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நாவின் பொருளாதார விவகாரங்களுக்கான துணைச்செயலாளர் ஹலோலியங் என்பவர் இந்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவர் வடமாகாண ஆளுனர் சந்திரசிறி, முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் இந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு ஐ.நாவின் பங்களிப்பு பற்றியும் அரசதரப்புக்கும், கூட்டமைப்பினருக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தவகையில் ஒருபுறம் இலங்கையை தமது வல்லாதிக்க கரத்துக்குள் பிடித்துக்கொள்ளும் செயற்பாட்டை ஆரம்பித்துள்ள அமெரிக்கா மற்றும் ஆதிக்க சக்தி கொண்ட நாடுகள் இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியை கவனமாகச் செயற்படுத்தி வருகின்றனர். இலங்கையில் போரின் பின்னரான காலப்பகுதியில் கூட தொடரும் தமிழ்மக்களின் உரிமைப்பிரச்சினைகள் குறிப்பாக நிலஆக்கிரமிப்பு, போர்க்குற்ற ஆதாரங்களை அழித்தல், சரியான பொறுப்புக்கூறலை மேற்கொள்ளாமை, தமிழ்மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் அசமந்தப்போக்கு என்று பல பிரச்சினைகள் தொடர்கின்ற நிலையில் குறிப்பிட்ட சில காலத்துக்குப்பிறகு தமிழ்மக்களின் இருப்பை இல்லாது செய்யக்கூடிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் இப்போது பரவலாகவே மேற்கொண்டு வருகின்றது. இதனால் உள்நாட்டுக்குள்ளும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழ்மக்கள் அதிருப்தி அடைந்து இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகச் சர்வதேச ரீதியில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அதுபோல மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பு இன்றி எந்தவிதமான செயற்பாடுகளையும், தீர்வினையும் இந்த அரசாங்கத்திடமிருந்து நாம் பெற்று கொள்ள முடியாது என வடமாகாணசபை கூறுகின்றது. அத்துடன் பெரும்பான்மை மக்களே அரசாங்கத்தை எதிர்க்கின்ற ஒரு நிலமைகூட தெற்கில் இன்று உருவாகிக்கொண்டிருக்கிறது. இப்படியான சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட சர்வதேச சமூகம் தயாராகியுள்ளது. உள்நாட்டில் அரசாங்கத்தின் எதிர்மறையான செயற்பாடுகளைக் குற்றமாகக் கருதி அவற்றுக்கு இலங்கை அரசாங்கம் தகுந்த பதிலை வழங்க வேண்டும் என்பதை சர்வதேச சமூகத்தினர் இன்று வலியுறுத்துகின்றனர். ஆனால் உலகநாடுகளின் உள்நோக்கத்தை இலங்கை அரசும், இலங்கை அரசின் மனநிலையை உலக நாடுகளும் நன்றாகவே புரிந்து வைத்துள்ளன. இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள ஜெனீவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் தீர்மானத்தை இலங்கை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

---

## 04

இதேநேரம் அசோகவின் கொம்பனி வடமராட்சியின் கரையோரங்களில் காவல் உலாக்களில் ஈடுபட்டதோடு நிலப்பரப்பைத் தமக்குப் பழக்கப்படுத்திக் கொண்டுமிருந்தது. 1987இல் செய்யப்பட்ட விடுதலை நடவடிக்கை போன்று தொண்டமனாறுப் பகுதியிலிருந்து இராணுவம் முன்னேற முயன்றால் எதிர்க்கும் பணி இவர்களுடையது.

நிலவு பின் இருட்டு வாதரவத்தை கிராமம் இடையிடையில் வீடுகளையும் வீட்டோடு சிறு தென்னந்தோப்புகளையும், பயிர் நிலங்களையும், சிறு பற்றைகளையும் கொண்டது. வெளியும் மறைப்பும் மாறி மாறி வரும் இவற்றைக் கடந்தே படையினரை நெருங்க வேண்டும்.

முன்னணி அவதானிப்பு நிலையில் மேஜர் நிரஞ்சினியோடு போன ஐவரும் நின்று அவதானித்தனர். இருவர் வெளிப்பாதுகாப்பில் ஈடுபட கோபி, பக்கவாட்டாக வீச புழுதி கிளம்பியது. அது மிகப்பெரிய மறைப்பைத் தராவிடினும் 'ஓடு' என்ற கட்டளை எதுவுமின்றியே மூவரும் ஓடத்தொடங்கினர். எல்லாமே ஒருசில கணங்களுக்குள் நடந்து முடிந்தன.

இப்போது மின்விளக்குகள் ஒளிரத்தொடங்கின. ஓடிக் கொண்டிருந்தவர்களின் காதில் மீண்டும் இரண்டு கையெறி குண்டுகள் வெடித்த ஒலியும் பரவலாக சூட்டுச்சத்தங்களும் கேட்டுக் கொண்டே இருந்தன. முன்னே

# உலகவரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

ஆட்பற்றாக்குறை இருந்ததால் எமது அணிகள் இடைவெளிகளை விட்டவாறே நிலைகொண்டன. எனவே வேவு, கண்ணிவெடி அணிகள் காவலுலாக்களும் கண்காணிப்புமாகக் கடுமையாக வேலை செய்யவேண்டி இருந்தது. நிமிடங்களைக்கூட வீணாக்காது உழைத்தனர். வேவு அணிகள் திரட்டிய தகவல்களின்படி அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால் வீதிகளில் இராணுவ ஊர்திகளின் நடமாட்டங்கள் அதிகரித்திருந்தன. படையினரின் நடவடிக்கைகளில் வித்தியாசம் தெரியவே எல்லோரும் எச்சரிக்கையடைந்தோம்.

படையினரின் வரவு வாதரவத்தை பகுதியில்நடக்கலாம்என்றஊகத்தைவேவு அணியினரிடம் வெளிப்படுத்திய கேணல் விதுஷா இராணுவம் வரவுள்ள பாதையை படை நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளை அறியும்படி அவர்களைப்பணித்தார். இதன்படி வேவு நடவடிக்கைகள் மேலும் வேகம் பிடித்தன.

படையினர் முற்றுமுழுதான தயார் நிலையில் இருந்தனர். மின்விளக்குகள் இரவை பகலாக்கின எமது வேவுக்காரர்களும் படைத்தளத்தின் தடைக்கம்பியை கடந்து உள்நுழைவதற்கு கடும் முயற்சிகள் செய்துகொண்டிருந்தனர். வாதரவத்தை பகுதி வழியே படையினரின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் நுழைய மேஜர் வாணியும் கப்டன் கோபியும் மறுபடி மறுபடி முயன்றார்கள்.

தொடர் வேவு முயற்சியில் ஒரு விடயம் அவதானிக்கப்பட்டது. இரவைப்பகலாக்கும் மின் பிறப்பாக்கிகள் இரவு 10.00 – 10.15, 12.00 – 12.15 வரையான இரண்டு பதினைந்து நிமிடங்களுக்கு ஓய்வெடுக்கின்றன என்பதுதான் அது. இந்தப் பதினைந்து நிமிடங்களைப் பயன்படுத்திப் படையினரின் மண் அணையில் ஏறும் முடிவை அவர்கள் எடுத்தனர். கணப்பொழுதுகளில் நகரும்வேகம்பெற்ற எமது வேவு அணியினர்க்கு பதினைந்து நிமிடங்கள் மிகப் பெரிய கால அளவாகவே தோன்றியது. இப்பொழுது வாதரவத்தை பகுதி முன்னணி காப்பரண்களில் படை நடமாட்டம் வழமைபோலிருந்தது. ஆனாலும் மூன்று நாட்களாக முயன்றும் உள்நுழையும் முயற்சி கைகூடவில்லை. படையினர் நடவடிக்கையை இதோ தொடங்கப்போகிறனர்என்றுஉள்ளுணர்வு சொன்னது. அதற்குள் எவ்வாறேனும் நுழைந்தே ஆகவேண்டும்.

**1996 ஏப்ரல் 02**

'எப்படியாவது இண்டைக்கு உள்ளே போய்விட வேண்டும்' என்றார் மைதிலி. அணிகள் புறப்பட்டு விட்டன. அன்று முன் ஜெனோ மூவரும் வெளிகொண்ட பகுதியொன்றைக் கவனமாகக் கடந்தனர். மிகவும் விழிப்புடன் நகர்ந்த இவர்கள் கட்டிடப்பகுதியினுள் இராணுவ நடமாட்டத்தை கவனித்து விட்டனர். உள்நுழையும் முயற்சி ஏற்கனவே மூன்று நாட்களாக வெற்றி தரவில்லை. இன்று நான்காவது நாள். தடையை நெருங்கு முன்பே இராணுவம் மாற்று முடிவை எடுக்கத்தான் வேண்டும்.

அவ்விடத்திலிருந்து மெல்ல பக்கவாட்டாக விலகி, மீண்டும் முன்னேறினர். மறுபடியும் முன்னே இராணுவம் மீண்டும் பக்கவாட்டாக விலகி முன்னோக்கி நகர்ந்தனர். அந்த நேரம் மின் பிறப்பாக்கிகள் ஓய்ந்தன. எங்கும் இருள் தான். மிக வேகமாக முதலாவது கம்பி வேலித்தடையை அடைந்தனர். கோபி பார்வையைக் கூர்மையாக்கிச் சூழலை அவதானிப்பதில் ஈடுபட வாணி உள்நுழைவதற்கென ஜெனோ தடைக்கம்பியை தூக்கி உயர்த்தினார். அதற்குள் கோபி ஒரு உருவத்தை கண்டுவிட்டார். தடைக்கம்பியிலிருந்து 5மீ தள்ளி அருகருகே நின்ற பூவரசுக்கும் பனைக்கும் கீழே அந்த உருவம் நின்றது.

சிறு மண்கட்டியைத் தூக்கி ஜெனோமீது கோபி எறிய கம்பியை விட்டுவிட்டு ஜெனோ வந்தார். வாணியும் திரும்பி வந்தார். மூவரும் ஒன்று சேர்ந்தவுடன் இராணுவத்தை கையால் கையால் காட்டினார் கோபி. இப்போது இராணுவத்தினர் கதைக்கும் குரலும் கேட்டது. சட்டென மின் விளக்குகளெல்லாம் உயிர் பெற்றன. அதற்குள் பதினைந்து நிமிடங்கள் கடந்து விட்டனவா? ஒருவர் எழுந்து நின்று இவர்கள் மூவரும் நின்ற திசையைப் பார்த்தார்.

30மீ வெளியான பகுதியில் மின்விளக்குகளின் பேரொளியால் மூவரும் துல்லியமான இலக்குகளாகத் தடைக்கம்பியருகே நின்றனர். அவர்கள் அதிலே நிற்பது, ஓடுவது தற்கொலைக்கு ஒப்பான விடயங்கள். திடீரென மின்விளக்குகள் அணைக்கப்பட்டன. நெருக்கடி எழுந்தால் கையெறி குண்டுகளை வீசி எழும் புழுதியைப் பயன்படுத்தி ஓடுவதென்ற முடிவு ஏற்கனவே அவர்களிடமிருந்ததால் அது தன்னிச்சையாகவே நடந்தது.

தடைக் கம்பியிலிருந்து இவர்கள் விலகத் தொடங்கவும் பூவரசு மரத்தடியிலிருந்து சரமாரியகச் சூடுகள் வந்தன. அதற்கிடையிலேயே அருகில் கிடந்த பனங்குற்றியொன்றில் காப்பெடுத்தவாறு வாணி படையினரை நோக்கிச் சுட ஜெனோ கையெறி குண்டை ஓடிக்கொண்டிருந்த ஜெனோ தள்ளாட அவருக்கு காயம் ஏற்பட்டதை புரிந்து கொண்ட வாணி அவரைத் தூக்கிக் கொண்டு ஓடினார். வரும் வழியில் படையினரைச்சந்தித்த இடங்களையெல்லாம்மிக வேகமாகக் கடக்க வேண்டும். இவர்கள் போனநேரத்திலிருந்தேவிழிப்புடன் இருந்த மைதிலியின் செவிகள் குண்டு வெடிக்கும் ஒலிகளைக் கிரகித்துக் கொண்டன. நடந்திருக்கக்கூடிய விடயங்களை அவர் ஊகித்துக் கொண்டார்.

இறுதியாகச் சந்திக்க வேண்டிய இடத்துக்குத் தலை தெறித்த ஓட்டத்தில் வாணியும், ஜெனோவும் மட்டுமே வந்து சேர்ந்தனர். கோபி வரவில்லை நிலமையை மைதிலிக்கு அறிவித்தனர். ஜெனோ காயப்பட்டிருந்ததால் சிகிச்சைக்காக பின்னணிக்கு அனுப்பப்பட்டார். வாணியைக் கூட்டிக்கொண்டு மாதுரியின் LMG உடனான ஒரு செக்சனை அழைத்துக்கொண்டு கோபியைத் தேட மைதிலி போனார். இவர்களின் வரவை எதிர்பார்த்தவாறு கவிழ்ந்த 'ப' வடிவில் இராணுவம் காத்திருந்தது. மாதுரி யின் LMG அடி அன்று படையினரை பின்வாங்கச் செய்ததில் பெரும் பங்காற்றியது. தேடுதலின் போது கோபி வீரச்சாவு அடைந்ததை உறுதி செய்து கொண்டனர். மிகுந்த கோபத்தோடு அதிகாலையில் தளம் திரும்பினர். கப்டன் கோபியே மாலதி படையணியின் முதல் மாவீரராக அன்றைய நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். கோபியின் இழப்பு எல்லோருக்கும் ஆவேசத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது.

இக்காலப்பகுதியில் வலிகாமத்துக்குள் இராணுவத்துக்குத் தலையிடியைக் கொடுத்தவாறுமகளிர்படையணியொன்று நின்றது. நாகர்கோயில் 3,7 தளத்தில் அசோகாவின் கொம்பனியோடு பயிற்சிகளிலீடுபட்ட லெப். கேணல் றிசானாவின் தலைமையிலான சிறப்பு அணியே அது. அந்த கொம்பனியின் களமருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்காக மாலதி படையணி தனது கள மருத்துவர்களில் ஒருவரான கப்டன் பராசக்தியை அனுப்பியிருந்தது.


1996.04.05 அன்று ஆனைக்கோட்டைப் பகுதியில் ஏற்பட்ட நேரடி மோதலில் அவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். மூன்று நாட்கள் இடைவெளியில் இது இரண்டாவது இழப்பு இவர் எமது படையணியின் இரண்டாவது மாவீரர் ஆவார். படையினருக்கு இழப்பை ஏற்படுத்தும் தாக்குதல் ஒன்றை செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் நின்ற மைதிலிக்கு முன்பு எடுத்த வேவுத் தகவல்களை வைத்துக்கொண்டு கண்ணிவெடிப்பிரிவோடு இணைந்து


**தொடரும்...**

**தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்**

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 11. | லெப் வாசுகி | செல்வராணி திருச்செல்வம் | யாழ்ப்பாணம் | 1996.04.25 | கச்சாய் சூரியக்கதிர் -2 (வி.அ) |
| 12. | லெப் அகிலா | ஜெயலட்சுமி கந்தசாமி | யாழ்ப்பாணம் | 1996.04.25 | கச்சாய் சூரியக்கதிர் -2 |
| 13. | கப்டன் பவா | சுதர்சினி ஆறுமுகம் | யாழ்ப்பாணம் | 1996.04.25 | கச்சாய் சூரியக்கதிர் -2 |
| 14. | கப்டன் தாட்சாயினி | கலைவதனி ஐயாத்துரை | வன்னி | 1996.04.25 | கச்சாய் சூரியக்கதிர் -2 |
| 15. | மேஜர் பூமகள் | சைலசிறி செல்வரட்ணம் | வவுனியா | 1996.04.25 | கச்சாய் சூரியக்கதிர் -2 |

# மாவை, சுரேஷ், அரியநேந்திரன், ஸ்ரீதரன் தாயக உணர்வுடன் வெளிநாட்டில் உரை...






அண்ணன் ஒன்று சொல்ல தம்பி ஒன்று சொல்வார் என்பதற்கு அமைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சு ஒருபுறமும் வடமாகாண சபை உறுப்பினர்களின் பேச்சு மறுபுறமுமாக இன்றைய அரசியல் நகர்வுகள் நகர்த்தப்பட்டு வருகிறது. தனது குடும்ப அரசியலை திறம்படவே நகர்த்திவரும் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தமிழ்மக்கள் மீதோ அல்லது சிங்கள மக்கள் மீதோ பெரியளவில் அலட்டிக்கொள்ளாமல் கீதாசாரத்தில் கூறியது போல் எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது, எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது, எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும' என்ற தோரணையில் செயற்பட்டு வருகிறது.

இவ்வகையில் இலங்கையின் சுதந்திர தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது. உள்நாட்டில் சிங்கள மக்களால் கொண்டாடப்பட்ட நிலையில் சுதந்திரக்காற்றை இன்னும் சுவாசிக்காது வாழும் தமிழ்மக்கள் அந்நாளை கரிநாளாகஅனுஷ்டித்தனர். அன்றையதினம் இலண்டனில் பிரித்தானிய மக்கள் பேரவையின் ஏற்பாட்டின் கீழ் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் த.தேகூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், அரியநேந்திரன், ஸ்ரீதரன் ஆகியோர் கலந்துகொண்டு தமது தாயக உணர்வோடு வீரதீரமாக உரை நிகழ்த்தி மக்களை விழித்துக்கொள்ளுமாறு கேட்டிருந்தனர். இவ்வுரைகளின் போது அவதானிக்கப்பட்ட முக்கிய விடயம் வடகிழக்கில் நிகழும் திட்டமிட்ட நிலஅபகரிப்பு மற்றும் சிங்களக்குடியேற்றம் பற்றியதாக அமைந்திருந்தது.

நில ஆக்கிரமிப்பானது 60 ஆண்டுகளாக நடைபெற்று வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாக 2009மேக்குப்பிறகு கடந்த 4 ஆண்டுகளாக மிக அதிகமாக இது நடைபெறுகிறது. இலங்கையில் தமிழர்களுடைய தாயகம் என்று அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் அடையாளங்களை அழித்துவிடும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களை இலங்கையரசு வகுத்து அதன்படி செயற்பட்டு வருகிறது.

இன்று தமிழ்மக்களுக்கான சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசிக்கொண்டிருக்க மறுபுறம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையான அம்சங்களில் ஒன்றான நிலவுரிமையை, நில அளவை இல்லாது செய்வதே அரசின் நிகழ்ச்சி நிரலாக அமைந்துள்ளது. நிலவுரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உரியது. கடந்த 60 வருடங்களுக்கு மேலாக மாறிமாறி ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழர்களின் நிலத்தொடர்ச்சியை ஆக்கிரமித்து வந்தனர். இதற்காக சிங்களக் குடியேற்றங்களை அவ்வப்போது ஏற்படுத்தி நிலத்தொடர்ச்சியில் உடைப்புகளைஏற்படுத்திவந்தனர். அதன் தொடர்ச்சியாக இன்று தமிழ்மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை இலக்கு வைத்து அங்குள்ள மக்கள் பலத்தை உடைக்க பரம்பல் வீதத்தை மட்டுப்படுத்த சிங்களக் குடியேற்றங்களை நிறுவுகின்றனர். இராணுவத்தினரைக் குடியமர்த்துகின்றனர். அதன் தொடர்ச்சியாக அவற்றுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கையையும் அரசு செயற்படுத்தி வருகிறது.





சுயாட்சி அமைக்கக் கூடிய நிலை ஏற்பட்டாலும் அது தமிழரின் நிலத்தில் அமையக்கூடியதான சூழல் உருவாகுவதையே த.தே. கூட்டமைப்பு விரும்புகிறது. சுயாட்சி செய்ய தமிழரின் சொந்த நிலம் தேவை. பாரம்பரியமாக தமிழைப் பேசி தமிழ் மொழியின் பண்பாட்டை கட்டிக்காத்துவரும் தமிழினத்தின் பண்பாட்டை உடையச்செய்யும் நோக்கில்தான் இராணுவம், பௌத்தபிக்குகள் ஊடாக நில ஆக்கிரமிப்பை அரசு செய்து வருகிறது. யுத்தத்தின் பின்னர் தமிழ்மக்களைத் தோற்கடிக்கப்பட்ட சமூகம்என்றுமஹிந்த ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிட்டிருந்தார். ஆனால் தோற்கடிக்கப்பட்ட சமூகம் அல்ல என்பதை வடமாகாண சபைத் தேர்தல் வெற்றி வெளிப்படுத்தியிருந்தது.

அம்பாறையில் பல இடங்களை இழந்திருக்கிறோம். திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாண கரையோரப் பகுதிகள் போன்றவற்றில் சிங்களக்குடியேற்றங்கள் நடக்கின்றன. இனி நடக்கப்போகும் பிரதேச சபையில் சிங்கள பிரதிநிதிகள் அங்கத்துவம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் கூட உள்ளன.

ஒரு நாட்டின் தேசிய இனமாக நமது அடையாளங்கள் இந்த மண்ணில் இருக்கவேண்டும் என்றால் நிலம் அடிப்படையானது. நிலமில்லாமல் வாழ்வில்லை. ஒரு இனத்தை அந்த இடத்திலிருந்து மாற்றுவதற்கான செயற்பாடுகளே இப்போது நடைபெறுகின்றது. பெண்களை இராணுவத்தில் சேர்த்தல் தொடக்கம் கருத்தடை வரை அனைத்தும் நடக்கின்றன. ஏற்கனவே விதவைகள் இருப்பதும் திருமணமாகி குழந்தைகளுடன் உள்ள பெண்கள் 2 குழந்தைகள் என்ற அறிவுரையின் கீழ் கருத்தடை செய்யப்படுவதும் இராணுவத்துக்கு பெண்கள் சேர்க்கப்படுவதும் எதிர்காலத்தின் மக்கள் தொகையில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தப்போகிறது. பண்பாடு, கலாசார ரீதியிலான அழிவு அதிகமாக நடைபெறுகின்றது.

3000 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட இனம் இன்று அழிவின் விளிம்பில் உள்ளது. யுத்தத்தின் பின் இலங்கை அரசு இலங்கை தனித்த சிங்கள பௌத்த நாடு என்று கூறுகிறது. அதற்கான நிகழ்ச்சி நிரலின் ஒரு வடிவம்தான் சிங்கள குடியேற்றம்.

60ஆம் ஆண்டுவரை கிழக்கு மாகாணம்திருமலை, மட்டக்களப்புஎன்று இருந்தது. பின் சிங்களக் குடியேற்றம் காரணமாக அம்பாறை மாவட்டம் என்று பிரிக்கப்பட்டது. கிழக்கில் திருமலை, அம்பாறையில் மூவின மக்களும் சமமாக உள்ளனர். மட்டக்களப்பில் மட்டும் தான் அதிகம் தமிழர்கள் உள்ளனர்.

இந்நிலைதான் இன்று வடக்கிலும் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களை குடியேற்றினால் தமிழ் மக்கள் அதனை எதிர்பார்ப்பார்கள் என்பதால்தான் இராணுவத்தை குடியேற்றுகிறது அரசு. மொத்த இராணுவம் 200,000 பேரில் 150,000 பேர் வடக்கில் உள்ளனர். 10,000 இராணுவத்தினருக்கான வீடுகள் சீன உதவியுடன் கொக்காவில் - முறிகண்டிக்கு இடையில் ஏ9 வீதியில் கட்டப்பட்டுள்ளது. 20,000 சிங்கள மக்கள் யுத்தத்தின் பின் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். காணி உறுதிப்பத்திரம் உள்ள காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. வடக்கில் மாத்திரம் 60,000 ஏக்கர் காணி இராணுவத் தேவைக்காக எடுக்கப்பட்டுள்ளது. ஆயுத முனையில் பறிப்பதுதான் இன்றைய நிகழ்ச்சிநிரலாக உள்ளது.

இந்த நிலத்தை பாதுகாக்கவே இதுவரை காலம் இத்தனை உயிர்கள் பலிகொடுக்கப்பட்டிருக்கிறார்கள். சுதந்திரமில்லாத வாழ்க்கை தான் ஈழத்தில் உள்ளது. தமிழ் அரசியல் வாதிகள் அச்சுறுத்தப்படுகிறார்கள். பொதுமக்கள் வாழும் இடங்களில் இராணுவப்பிரசன்னம் உள்ளது. போராட்டம் சத்தியாக்கிரகம் என மக்கள் ஈடுபட்டால் அச்சுறுத்தப்படுகிறார்கள். விசாரணைக்காக அழைத்துச்செல்லப்படுகிறார்கள். காணாமல் போனோர் தொடர்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள தலைநகரை நோக்கி பயணித்த பேரூந்து வண்டிகள் வவுனியாவில் வைத்து திருப்பப்பட்டன.

வடகிழக்கில் 16 இலட்சம் பேரும் புலம்பெயர்நாடுகளில் 10 இலட்சம் , 26 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் இருக்க வேண்டிய இடத்தில் வடகிழக்கில் 5 பேருக்கு ஒரு இராணுவம் என்ற கணக்கில் உள்ளது.

மேலும்புலம்பெயர்ந்தநாடுகளில் உள்ள தமிழர்களின் பெயர்களும் காணாமல் போனவர்களினதும் பெயர்களும் நீக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இறந்தவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்காது ஆட்பதிவுத் திணைக்களம் பெயர்களை நீக்கும் செயற்பாடுகளை மேற்கொள்கிறது.

13 இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் உலகில் வாழ்கின்றனர். கனடா, லண்டனில் 3,*3 இலட்சம் பேர் உள்ளனர். ஆனால் நாடு கடந்த தமிழர் அமைப்பில் அனைத்து புலம் பெயர் மக்களின் பங்களிப்பு உள்ளதா? என்ற கேள்வி எழுகிறது. புலம்பெயர்ந்த மக்களின் காணிகள் தாயகத்தில் கவனிப்பாரற்று கிடக்கின்றன. காடுமண்டி கிடக்கும் காணிகள் கம்பனிகளுக்கு விற்கப்படுகின்றன. அவை சிங்களமயமாகின்றன. யாழ்ப்பாணத்தில் புங்குடிதீவு உட்பட பல இடங்கள் முற்றுமுழுதான சிங்கள பூமியாக மாறிவருகிறது. கற்பிட்டி, மன்னார் ஊடாக யாழ்ப்பாணத்துக்கான பாதை அமைக்கப்பட்டுள்ளது. சிசேட தரத்தில் அமைக்கப்படும் இப்பாதையின் இருபுறமும் அரசதேவைக்காகச் சுவீகரிக்கும் நோக்கிலேயே இவ்வீதி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது முல்லைத்தீவு கரப்பந் தோட்டம் கிராமம் இராணுவ பொறியியல் கல்லூரி அமைக்கப்பட விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கிழக்கில் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறையிலும் இப்படியான நிகழ்வுகள் நடைபெறுகிறது. 3 இலட்சம் பேர் இப்போரில் இறந்துள்ளனர். 10 இலட்சத்துக்கு மேற்பட்டோர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். 10 இலட்சம் பேர் மட்டுமே வடக்கில் உள்ளனர். ஆனால் 150,000 இராணுவம் அதைத்தவிர கடல், வான்படை, விசேட அதிரடிப்படை ஆகியோர் வடக்கில் உள்ளனர். வலிகாமம் வடக்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னாரில் மீளக்குடியேற முடியாதபடி இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இந்நிலையை மாற்றவேண்டுமாக இருந்தால் ஒன்று வடக்கிலுள்ள இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்.

4387 ஏக்கர் காணி வலி வடக்கில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் 31 அகதிமுகாம்களில் மக்கள் இன்னும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்நிலை தொடர்ந்தால் மீதமுள்ள மக்களும் நாட்டைவிட்டு ஓடிவிடுவார்கள். இப்போது அவுஸ்திரேலியா செல்லும் மக்கள் உதாரணம். அப்படி செல்லாத மக்கள் சிங்கள மக்களுடன் இரண்டறக் கலக்க வேண்டிய நிலை உருவாகும், உருவாகியுள்ளது. இதனால் மொழி மறக்கப்படும். இதனால் பண்பாடு மாறும். கலாச்சாரம் சீரழியும் இதனால் காலப்போக்கில் தமிழினம் தனது இனத்துக்குரிய அனைத்தையும் இழந்து வாழ இடமற்றவர்களாக மாற்றப்படுவர். ஆகவே நிலஅபகரிப்புக்கு எதிராகப் புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள் அனைவரும் ஒன்றுதிரள வேண்டும், நிலப்பறிப்புக்கு எதிராக புலம் பெயர்ந்தவர்களின் பலம் அவசியம் என்பதை வலியுறுத்துவதாக அமைந்திருந்ததைக் காணலாம்.

நெற்றிப்பொறியன்

# அமெரிக்கா இலங்கையில் தளம் அமைக்கவே மஹிந்தவுடன் பேரம் பேசுகிறது

## உடன்படாவிட்டால் தலைபோகும் ஆபத்து



மாதங்கள் என்ற அளவு நாட்களாகக் குறைந்து கொண்டு வரும் நிலையில் ஜெனீவா மனித உரிமை மாநாட்டுக்காகப் பலரும் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா - பிரிட்டன், மனித உரிமை ஆணையாளர், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச ஊடகங்கள், இலங்கைக்குள்ளிருக்கும் மனிதஉரிமை ஆர்வலர்கள், பொதுமக்கள், இலங்கை அரசு என்று பல தொகுதிவாரியான பகுதியினர் இக்கூடடத்தொடரை முகம்கொடுக்க தயாராகி வருகின்றனர்.

அவ்வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் பத்தாயிரம் சொற்களைக் கொண்ட அறிக்கை ஒன்று தயாராகியுள்ளது. இதனை இவர் எதிர்வரும் 26ஆம் திகதி நண்பகல் 12.00 மணியளவில் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படமுன் ஐந்து அரச சார்பற்ற நிறுவனங்களின் இலங்கை இராணுவத்தினர் குற்றம் இழைத்தாக குறிப்பிடக்கூடிய அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அறுபது சாட்சியாளர்கள் அடங்கியதாக



இவ்வறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

அதுபோல இலங்கையில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், உட்பட சில கட்சிகள் தமது அழுத்தத்தை வழங்கி வருகின்றன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சர்வதேச ரீதியிலான ஒரு தீர்வை எதிர்பார்க்கிறது. ஜனநாயக மக்கள் முன்னணி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்கு பலம் சேர்த்து வருகிறது. முஸ்லிம் காங்கிரஸ் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள யோசனை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட எந்த நடவடிக்கையிலும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என தீர்மானித்துள்ளது. இங்குள்ள தமிழ்மக்கள் அனைவரும் சர்வதேச ரீதியி லான தீர்மானத்தை எதிர்பார்க்கின்றனர்.

இப்படியான சூழ்நிலையில் அமெரிக்காவின் முன்றாவது அறிக்கை தயாராகியுள்ளது. அமெரிக்க அரசின் சிரேஷ்ட அதிகாரி நிஷா தேசாய் பிஸ்வால் முதற்கொண்டு அவருக்கு முன்னதாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஏனைய உயர் அதிகாரி களின் இலங்கை விஜயங்களின் அடிப்படையிலும்ஏற்கனவே பிரேரிக்கப்பட்டிருந்த இரு அறிக்கைகளின் மேற்கோள்களினடிப்படையிலும் மூன்றாவது அறிக்கை அமையப்பெற்றிருக்கிறது.

இலங்கையில் ஈழப்போரின் இறுதிநாட்களில் சிவில் சமூகத்தின் மீது நடத்தப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து கண்டறிய நம்பிக்கையானதும் சுயாதீனமானதுமான விசாரணை ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பிலான அறிவுரை ஏலவே வழங்கப்பட்டிருந்த நிலையில் மூன்றாவது அறிக்கையினூடாக அது அழுத்தமாக மாற்றம் பெற்றிருக்கிறது. இது குறித்து அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவே அமெரிக்க அரசின் சிரேஷ்ட பிரதிநிதி உட்பட பலர் வந்திருந்தனர். இவர்களில் மிக அண்மையில் வந்திருந்த அமெரிக்காவின் சிரேஷ்ட பிரதிநிதி நிஷா தேசாய் பிஸ்வாலின் விஜயம் மிகமுக்கியமான காலத்திற்கு ஏற்ற செயற்பாடாகக் கணிக்கப்பட்டுள்ளது. இவரது விஜயத்தை வைத்து பல உள்ளூர், வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் ஆசிரியர் தலையங்கம் வரைந்துள்ளமை அவரது பயணத்தின் முக்கியத்துவத்தை காட்டும்.

போரின் இறுதிக்கட்டத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அது தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. கொல்லப்பட்டவர்களில் அதிகளவானவர்கள் அரசாங்கத்தின் ஷெல் வீச்சு தாக்குதலிலேயே கொல்லப்பட்டுள்ளனர். எனினும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது. மாத்திரமின்றி அந்த விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கு தடையேற்படுத்தியது. இதற்காக இதுவரை இரண்டு யோசனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்நிலையில் இப்போது மூன்றாவது யோசனைக்கான நேரம் வந்து விட்டது.

இலங்கைக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நிலையான சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை அமெரிக்காவும் ஏனைய உலக நாடுகளும் உருவாக்க வேண்டுமென அமெரிக்கப் பாராளமன்றம் வலியுறுத்தியுள்ளது. அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை அமைப்புக்கள் போன்ற தரப்பினரை தடையின்றி பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மனித உரிமை, ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு, பொருளா தாரம், அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் போர் முடிந்து 5 வருடங்கள் கழிந்துள்ளது. ஆனால் பொறுப்புக் கூறும் விடயம் தொடர்பில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை. அபிவிருத்தி, மீளக்குடியேற்றல், காணாமல் போனோர் தொடர்பிலான விசாரணை, வடக்கில் தொடர்ந்தும் நிலைத்திருக்கும் இராணுவம், சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு, ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் போன்ற விடயங்களுடன் நில அபகரிப்பு தொடர்பிலான பொறுப்புக்கூறலில் அரசாங்கம் முறையான நடவடிக்கைகளை முழுமையாக இதுவரை வழங்கவில்லை. இதுபற்றி சர்வதேச அமைப்புக்கள், நாடுகள் கேள்வி எழுப்பினால் மிகநீண்ட காலப் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட எடுத்த காலஅளவைவிட அவற்றைக் கட்டியெழுப்புவதற்கு நீண்ட காலம் தேவை என்று மறுபடியும் மறுபடியும் கூறி வருகிறது. பொறுப்புக்கூறலுக்கான காலஅவகாசம் தீர்ந்துபோயுள்ள நிலை யில் அரசாங்கம் வடக்கில் ஒரு பகுதி மக்களை குடியமர்த்தியுள்ளது. குறிப்பிட்டளவு இராணுவத்தினரை வெளியேற்றியுள்ளது. சிறியளவில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகிறது. மற்றும் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தியுள்ளது. இவற்றை விட வேறு என்ன செய்திருக்கிறது? இன்னும் முகாம்களில் வாழும் மக்கள் உள்ளனர். காணாமல் போனவர்கள் தொடர்பில் எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை. மாறாக காணாமல் போனவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் பெருமளவில் காணி அபகரிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அபிவிருத்திப்பணி என்ற போர்வையிலும் குடியேற்றம் என்ற போர்வையிலும் மிகப்பெரியளவிலான அபகரிப்பு முயற்சி முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா என்று பல இடங்களில் நடைபெறுகின்றது. இப்படியான நிலையில்தான் சர்வதேச விசாரணையைக் கோரி வடமாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இப்படி பல பக்கங்களிலிருந்தும் எழுப்பப்பட்ட கேள்விகள் எதிர்ப்புக் குரல்கள் போன்றவற்றை கருத்தில் எடுத்தே இறுதித்தீர்மானம் எனும் நிலைப்பாடு இன்று உருவாகியுள்ளது. பொறுப்புக்கூறல் எனும் விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காது போனால் பின்னாளில் இலங்கையில் நடைபெற்ற படுகொலைகளுக்கு சர்வதேச சமூகமே அங்கீகாரம் வழங்கியதாக கருதப்படவேண்டிய தேவை உருவாகும். இதனால்தான் போரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து முழுமையான பொறுப்புக் கூறலை கோரி நிற்கும் இலங்கையர்களுடன் சர்வதேசமும் அணிதிரண்டுள்ளது.

இப்போது ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமைதியின்மை நிலவும் ஒரு நாடாகத்தான் இலங்கை பார்க்கப்டுகிறது. உள்நாட்டுப்பிரச்சினை முடிவுக்கு வந்தாலும் சர்வதேச தலையீடு என்பது இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் நியாயமாக இருக்கலாம் ஆனால் தற்போதைய நிலையில் அவை இலங்கையில் நல்லிணக்கத்திற்கு எந்தளவு சாதகமானவை என்ற கேள்வியும் எழாமலில்லை.

உண்மையில் பார்க்கப்போனால் இலங்கை விவாகாரம் தொடர்பில் அமெரிக்கா தலைமையிலான சர்வதேசம் அக்கறை கொண்டிருந்தாலும் இலங்கையில் தளமமைக்கும் முயற்சியில் தான் அமெரிக்காவின் முழுக்கவனமும் இருக்கிறது. அதற்காக அமெரிக்கா இலங்கை தொடர்பாக பிரேரணையொன்றை சமர்ப்பித்தாலும் அது போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணையொன்றை கோரும் பிரேரணையாகவே இருக்காது என்றுதான் பலரும் கூறுகின்றனர்.

ஆசிய பசுபிக் வலயத்தைப் பொறுத்தவரையில் பல நாட்டு கடல் சூழல் அமைப்பைப் பார்க்கின்ற போது கரையோரமாக போர்க்கப்பல்களோ கனரக கப்பல்களையோ தரித்து வைக்க முடியாது. ஆசியப்பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் ஒரு இயற்கையான துறைமுகத்தை (திருகோணமலை) கொண்டது இலங்கை. இதனைக் குறிவைத்தே அமெரிக்கா தனது கடற்படைத் தளங்களை அமைத்துக்கொள்ள போர்க்குற்றம் என்ற துருப்புச்சீட்டை இலங்கை அரசுக்கு எதிராகக் கையில் எடுத்துக்கொண்டு தனக்குரிய விடயத்தை இலங்கையரசு உரிய முறையில தரத்தவறினால் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்த்து இன்னொரு ஆட்சியைக் கொண்டு வரும் நோக்கிலும், பிரபாகரன் இல்லாது வேறோரு தலைமையின் கீழ் போராட்டத்தை தலைதூக்கச் செய்வதிலும் அமெரிக்க அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. சீனா பாகிஸ்தானின் வல்லாதிக்கம் இலங்கையில் காணப்பட்டு வருகின்ற போதிலும் ஸ்திரமான இராணுவ தளங்களை அமைப்பதற்கு இரு நாடுகளும் இலங்கை அரசிடம் கேட்கவில்லை. ஆனால் அமெரிக்கா மட்டும் அன்றிலிருந்து இன்றுவரை அதனோடு மட்டும் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டு வருகிறது. தலைக்கு மேல் வெள்ளம் வருவதற்கு முன் மஹிந்த ராஜபக்ஷ அணை கட்ட வேண்டும். இல்லையேல் தலையோடு போகுமே தவிர தலைப்பாகையோடு போகாது. இந்தியா, சீனா நாடுகளின் இலங்கை வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் 30, 40, 50 வருட ஒப்பந்தம் அடிப்படையில் அவர்களுடைய அபிவிருத்திப் பணிகள் வாகன உதிரிப்பாகங்கள், வாகனங்கள் போன்ற சமாச்சாரங்கள் நடந்து வருகின்றன.

விடுதலைப்புலிகளின் போராட்டம் தோல்வியுற்றதோ அல்லது முள்ளிவாய்க்காலில் போர் முடிவுற்றதோ அமெரிக்காவுக்கு தெரியாது என்று சொல்வதற்கில்லை. அனைத்து நாடுகளும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியபோது அமெரிக்கா மௌனம்

12 ஆம் பக்கம் பார்க்க ...

**நெற்றிப் பொறியன்**

# இலங்கைவாழ் மக்களின் சமுதாய சீர்கேடு

இன்று பெரும்பாலும் இலங்கையைத் தளமாகக் கொண்ட ஊடகங்களாக இருந்தாலும் சரி சர்வதேச ரீதியிலான தமிழ் ஊடகங்களாக இருந்தாலும் சரி அனைத்து ஊடகங்களினதும் கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியிருப்பது யுத்தத்தின் பின்னரான சமுதாய சீர்கேடு. இலங்கையில் எந்த விடயத்தைப் பேசுபொருளாகக் கொண்டாலும் அனைத்தையும் அரசியல் கண்கொண்டு பார்க்க வேண்டிய நிலையே உருவாகியுள்ளது. இவ்வகையில் இலங்கையின் எதிர்காலத்தைப் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி வரும் ஒரு விடயம் கலாச்சார சீர்கேடு என்றால் அது மிகையல்ல.

30 வருடத்துக்கு மேற்பட்டகால இலங்கையின் விடுதலைப் போராட்டம் தமிழ் மக்கள் மனங்களின் விகாரப்படிவுகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது நடைமுறை விடயங்களினூடாகப் புரிகிறது. இலங்கையில் வடக்கு, கிழக்கு, மற்றும் தலைநகர் ஆகிய பகுதிகளில் சமுதாயச் சீர்கேடு உச்சம் பெற்றுள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட ஒரு செய்திக் குறிப்பிலே ஆசியாவில் அதிகளவான ஆபாச இணையதளங்களைப் பார்வையிடும் மக்களின் எண்ணிக்கை இலங்கையில் தான் அதிகம் என்று கூறப்பட்டிருந்தது. இதற்கு இரு விதமான காரணங்களைக் கூறலாம். ஒன்று போரின் பின்னரான கலாச்சாரப் பிறழ்வுகள் மற்றையது தொழிநுட்ப விருத்தியால் இளைய சமூகத்தினரைக் கட்டிப்போட்டுக் கொண்டிருக்கும் இணையதளங்கள். இவை இரண்டும் மிகப்பெரிய பங்காற்றுகின்றன.

சமுதாயச் சீர்கேடு எனும் போது வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் முதன்மை பெறுகின்றன. வன்முறைகள் எனும்போது இவற்றுக்குள் சிறுவர், பெண்கள் மீதான வன்முறைகள் உள்ளடங்கலாக அனைத்தும் அடங்குகின்றது. துஷ்பிரயோகங்கள் எனும்போது பெண்கள், சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் அடங்கலாக ஏனையவையும் உள்ளடங்கும். இவையிரண்டையும் தவிர கொலை செய்தல், கடத்துதல், போதைப்பொருள் பாவணை, பாலியல் தொழில் செய்தல், என்று பற்பல விதமான நடைமுறைப் பிறழ்வுகள் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டு பல இடங்களில் அவை புலம்பல்களாகவே வெளிப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் நாள் தோறும் ஐந்து பெண் குழந்தைகள் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். 84 வீதமான பாலியல் வன்கொடுமைகளினால் 18 வயதுக்கும் குறைந்த பெண் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர். ஆபாச இணையதள பயன்பாட்டில் இலங்கை உலக அளவில் முன்னணி வகிக்கின்றது.

அண்மையில் இணையதளம் ஒன்றில் நள்ளிரவுக்குப் பின் உலாவும் "இருட்டுப் பெண்கள்" என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. 'இருட்டுப் பெண்கள்' என்பவர்கள் பாலியல் வியாபாரிகள். நள்ளிரவுக்குப் பிறகு தான் 'தொழிலுக்காக' இவர்கள் தலைகாட்டுவார்கள். இந்த 'இருட்டுப் பெண்களின்' தொழில் அவசரத்தனமானது. ஒழுங்கைகள்தான் அவர்களின் தொழிலிடம். அங்குள்ள இருளடர்ந்த ஏதாவதொரு மூலையில் இவர்கள் தமது நுகர்வோனுடன் ஒதுங்கிக் கொள்வார்கள். நுகர்வோருக்கு 'இருட்டுப் பெண்களின்' முகமோ அடையாளங்களோ சரிவரத் தெரியாது. ஆனாலும், அவசர அவசரமாகக் 'காரியத்தை' முடித்துக் கொண்டு நுகர்வோன் கிளம்பி விடுவான். மிகச் சரியாகச் சொன்னால் அங்கு வரும் நுகர்வோர் தான் யாருடன் புணர்ந்தேன் என்று தெரியாமலேயே 'இருட்டுப் பெண்களிடம்' காசைக் கொடுத்து விட்டு, நடையைக் கட்டிவிடுவார்கள்! இப்படியாக இந்தச் செய்தி அமைந்திருந்தது. இது தலைநகரில் பத்துவருடங்களாக தொடர்ந்தும் நடைமுறையில் இருந்துவரும் ஒரு விடயம். இன்று இந்நிலமை வடக்கை நோக்கி வந்திருப்பதை நாம் அறியலாம். வாகனங்கள், நடைபாதைகள், குறுக்குச்சந்துகள் மற்றும் ஆள் அரவம் குறைந்த பகுதிகளில் இப்படியான விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்கு செல்கிறது நமது சமூகம் என்ற அங்கலாய்ப்பு எல்லோரிடத்திலும் சாதாரணமாக இன்று ஏற்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் தமிழ்ப்பண்பாடும் கலாசாரமும் சீரழிந்து வருவதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. இலங்கையின் இராணுவம் மற்றும் பொலிஸாரும் அதிகார அலகுகளுக்குள் நேரடியாக அங்கம் வகிப்பவர்களும், தமிழ் சமூகத்திற்குள்ளே இருக்கின்ற சமூக பொருளாதார அரசியல் அதிகார நிலைகளில் இருப்பவர்களும், அரசஅதிகாரமும், பாலியல் உணர்வுகளைத் தூண்டக்கூடிய மொழியையும்படங்களையும்சுமந்துவரும் ஊடகங்களும், என்று பல காரணங்களும் இன்றைய இத்தலையங்கத்தை வலுப்படுத்துகின்றன.



இன்றைக்கு தனிநபர்சுதந்திரம் என்பது அனைவரதும் உடைமை என்ற கருத்து தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் எமது சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் சிறுவயதில் இருந்தே உருவாக்கப்படுகின்ற இடைவெளி மிகவும் குறைந்துள்ளது. சிறுவர்களும் சிறுமிகளும் ஆண்களும், பெண்களும் குடும்ப நிலையிலும் சரி பாடசாலை நிலையிலும் சரி சமூகத்திலும் சரி பாரபட்சமற்ற முறையில் கலந்து பழகுகின்றனர். இதை சமூகம் ஊக்கப்படுத்துகிறது என்றுதான் கூறவேண்டும். சாதரணமாகப் பெண்ணுடல்பற்றியும்ஆணுடல்பற்றியும் வெளிப்படையான விஞ்ஞானபூர்வமான தகவல்களை சிறுபருவத்திலேயே தெரிந்து கொள்ள முற்படுகின்றனர். அது உரிய கல்விமுறையாக அமையாது சுயதேடலாக அமைவதே பிரச்சினைகளுக்கு காரணமாகவும் அமைந்து விடுகிறது. எமது பண்பாட்டில் இளம்பராயத்தினரின் பாலியல் இயல்பூக்கத்திற்கான அங்கீகாரம் மிகக்குறைவாகவே இருந்து வருகிறது. அதுவே இன்று பிரச்சினையாகிப் போய்விட்டிருக்கிறது. ஆனால் இதை ஊக்கப்படுத்தவேண்டும் என்று கூறவில்லை.

வடக்கில் குறிப்பாக போர் முடிவுக்கு முன்னரான காகட்டத்தில் இருந்த மக்கள் அனைவரும் கலாச்சாரம், பண்பாட்டில் மிகவும் சிறந்து விளங்கியிருந்தார்கள். கட்டுப்பாடுகள், பெற்றோரின் கவனிப்புக்கள் போன்றன இளையோருக்கு மிகையாகக் கிடைத்தன. இதனால் இத்தகைய பிரச்சினைகள் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஆனா்ல்போரின்பின்னரானகாலத்தில்இப்போக்கு தலைகீழாயுள்ளது. இராணுவம், காவல்துறை பொதுமக்களுடன் சேர்ந்து வாழ்கின்ற நிலைமைதான் இன்று வடக்கில் உள்ளது. கலப்பு திருமணம் வரை இது இன்று சென்றிருக்கிறது. இனம், மதம், மொழி போன்றவற்றில் வேறு வேறானவர்களாக இருந்தாலும் காதல் என்ற விடயத்தில் ஒருமித்துப் போகின்றனர். இதை எப்படி சொல்வது என்று தெரியவில்லை.

வடகிழக்கில் பலவிடங்களில் சிறுவர்கள் இராணுவத்தினரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுவதாக அடிக்கடி செய்திகளில் காண்கின்றோம். கைது செய்யப்படுபவர்கள் சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றனர். திருமணம் செய்யும் வயதை அடையும் முன்னர் பருமடைந்த சிறுமிகள் கர்ப்பம் தரிப்பது அதிகரிக்கிறது. இலங்கையில் இளவயது திருமணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை யுனிசெப் கூறுகிறது. இளவயது திருமணங்களினால் மன உளைச்சல், சுகாதார சீர்கேடு மற்றும் சிசு மரணங்கள் போன்றன அதிகரிப்பது மட்டுமன்றி, அவர்களுக்கு எதிரான பாலியல் மற்றும் வன்முறைகளும் அதிகரிக்கின்றன. இலங்கை முழுவதும் தற்போது சிறார்கள் மற்றும் பெண்களுக்கான முறைப்பாடுகளைப் பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு 36 பாதுகாப்புப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறார்கள் வன்முறைகளை ஆராய்ந்து தீர்ப்பைக் கூறுவதற்காக சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்று கொழும்பின் புறநகர்ப் பகுதியிலும் பிறிதொரு சிறப்பு நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப் பட்டுள்ளன. இருந்தபோதிலும் இலங்கையில் சிறுவர்கள் சந்திக்கும் வன்முறைகள் மிக அதிகமாக உள்ளன. தற்போதும்இவைதொடர்பான வழக்குகள் முடிவின்றி நிலுவையிலுள்ளன. குற்றங்களுக்கான தண்டணைகள் வலிமையற்றதாகக் காணப்படுவதே இதற்கு காரணமாகிறது.

போதைப்பொருள் பாவணை, மதுவருந்துதல், பாடசாலைகளுக்கு போதைப்பொருட்களைப் பாவித்துவிட்டுச் செல்லல் என்ற கொடூரமான நிகழ்வுகள் கூட நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. அண்மையில் ஒரு மாணவன் பாடசாலைக்கு மதுவருந்திவிட்டுச் சென்று ஆசிரியர் மற்றும் மாணவர்களுடன் தகராறு செய்த செய்தி ஒன்றைக்கூட கேள்விப்பட்டிருப்பீர்கள். மிக அண்மையில் திரைப்படம் ஒன்று தொடர்பாக ஒரு அச்சு ஊடகம் எழுதிய விமர்சனத்தை ஆட்சேபித்து அவ்வலுவலகத்தின் முன்னால் சில இளைஞர்கள் சென்று எதிர்ப்புக் குரல் எழுப்பிய சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்து. திரைப்பட வெளியீடுகளுக்காக விசேட கட் அவுட்கள் வைப்பதும் அவற்றுக்கு பால் அபிஷேகம் செய்வதும் போஸ்டர்கள் வைப்பதும் ரசிகர் மன்றங்களை உருவாக்க முயற்சிப்பதும் என்று ஒருதொகுதி இளைஞர்கள் சென்று கொண்டிருக்கின்றனர்.

பேஸ்புக் இணையதளத்தின் செல்வாக்கு இன்று மிக மிக அதிகம் என்றே கூறவேண்டும். புதிய நண்பர்களைத் தேடவும், காதலிக்கவும், அரட்டையடிக்கவும், என்று பல காரணங்களுக்காகவும் இவ்விணையதளத்தை நாடுகின்றர். சிலர் அதுவே கதி என்றும் இருக்கிறார்கள். ஒரே நேரத்தில் பல பெண்களுடன் சட்டிங்ஸ் செய்வது, ஆபாசமாகப் பேசுவது என்று பலவும் நடைபெறுகின்றன. இதனால் பல பெண்களின் வாழ்வுசீரழிவுக்குள்ளாகிறது. சில இளம்பெண்கள் இதனால்தற்கொலை செய்துகொண்டு இறந்துபோகின்ற செய்திகளும் நமை அதிர்ச்சியில் உறைய வைக்கின்றன.

இலங்கையின் வடபகுதியில் அதிகரித்துவரும் இராணுவமயமாக்கலும், பொறுப்பான அரசு இல்லாமையும், அப்பகுதியில் இயல்புநிலை உருவாகாமல் தடுப்பதோடு, எதிர்காலத்தில் வன்முறைகளுக்கு வழிவகுக்கக்கூடும் எனப்படுகிறது. வடக்கில் போதைப் பொருட்களின் பாவணையின் அளவு அதிகரித்துள்ளது. மதுவிற்பனை நிலையங்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதி வரையிலான காலப்பகுதியில் நாட்டின் சகல பாகங்களிலும் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 966 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

இப்படியாக பல பிரச்சினைகள் பற்றிப் பேசிக்கொண்டு போகலாம். யுத்தத்தின் பின்னரான ஸ்திரசூழ்நிலை தமிழ்மக்களுக்கு சாதகமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்கும் என்றுஎண்ணியிருந்தநிலையில்சமுதாயச் சீர்கேடுகள்மிகவும்வேகமாகஅதிகரித்துச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் எதிர்கால சந்ததியினர் மிகவும் மோசமான தாக்கங்களை எதிர்கொள்ளப்போகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற அடிப்படையில்உருவாக்கப்படும்நட்சத்திர விடுதிகள், உல்லாசப்பயணிகளைக் கவரும் வகையில் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன தமிழ்மக்களின் இளைய சமூகத்தினரை வேண்டுமென்றே நாசமாக்கும் செயற்பாடுகளாக கருதப்படுகின்றன. அபிவிருத்தி என்ற வகையில் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து கட்டுமாணங்களும் தரமுயர்த்தப்படும் நிலையில் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு அரசு பொறுப்புக் கூறாது. இதனை விளங்கிக் கொள்வது அவசியம். உலகத்தில் எத்தனை விதமான கலாச்சாரம் இருந்தாலும் இல்லை இனிப் புதிதாகத் தோன்றினாலும் நம் தமிழர்களது கலாச்சாரத்துக்கு ஈடாகாது என்பதைநாம்புரிந்துகொள்ளவேண்டியது காலத்தின் தேவையாகும்.

அநாமிக்கா

# மேல்மாகாணசபைத் தேர்தலில் மனோகணேசனின் வெற்றி உறுதியா? இல்லையா?

எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி தென் மற்றும் மேல்மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக கட்சிகளும், சுயேச்சைக்குழுக்களும் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர். இதனால் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. ஒருபுறம் ஜெனீவாவில் மனிதஉரிமைகள் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படப்போகும் தீர்மானத்தினால் சர்ச்சைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டாலும் மறுபுறம் தேர்தல் களை கட்டியுள்ளது.

இம்முறை மேல்மாகாண சபைத்தேர்தலில் பல் சிறுபான்மைக்கட்சிகளும் தனித்துப் போட்டியிடவுள்ளமைவிசேட அம்சமாகும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் முன்னணி (அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்) மற்றும் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக்கட்சி, நவசமசமாஜக்கட்சி ஆகியன தனித்துப் போட்டியிடுகின்றன. இதனால் வாக்குகள் சிதறடிக்கப்படும் நிலை உருவாகும் என்பது உண்மையாகியுள்ளது.



மேல்மாகாணமானது இலங்கையின் ஏனைய மாகாணங்களை விட பலவிதங்களில் முக்கியம் பெறுகிறது. நாட்டின் தலைநகரான கொழும்பு இம்மாகாணத்திலேயே அமையப்பெற்றிருக்கிறது. இங்கு பல்லின மக்களும் வாழ்கின்றனர். கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழர் (இலங்கைத் தமிழர், இந்தியவம்சாவளித்தமிழர்) மற்றும் முஸ்லிம்களின் எண்ணிக்கையானது கொழும்பு மாவட்ட சனத்தொகையின் 21% ஆகும். மொத்த சனத்தொகையில் 11.1 % ஆகும். வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தின் சில பகுதிகள் தவிர்த்து சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் பிரதேசம் என்ற வகையில் கொழும்பு இலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

ஆனால் இங்கு வாழ்கின்ற தமிழ்மக்களுக்கான அரசியல் தலைமைத்துவம் போதுமானதாக இல்லை என்ற குறை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இங்குள்ள மக்கள் கல்வி, தொழில்வாய்ப்பு. சுகாதாரம் வடிகாலமைப்பு, வீட்டுவசதி, என பல்வேறுபட்ட பிரச்சினைகளை நீண்ட காலமாக எதிர்கொண்டு வருகின்றனர். ஆனால் சரியான முறையில் அவை தீர்த்து வைக்கப்பட ஏற்ற பிரதிநிதித்துவம் இங்கு இல்லை என்றே கூறலாம். 2000ஆம் ஆண்டின் பின்னர்தான் தமிழ் தலைமைத்துவம் பற்றிய பிரக்ஞை இங்கு ஓரளவு ஏற்பட்டது எனலாம். இதற்கு காரணம் மனோகணேசனின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம். இன்று அது ஓரளவு பலமிக்க சக்தியாக உருவெடுத்துள்ளது என்பது உண்மைதான்.

இவ்வகையில் 2000ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் போட்டியிட்டார் மனோகணேசன். ஆனால் சிறியளவிலான வாக்குவித்தியாசத்தில் தோல்வியை அடைந்தார். இதற்கு முன்பு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மனோ கணேசனுடைய (அன்றைய) கட்சியான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டணியில், மயில் சின்னத்தில் போட்டியிட்டு சில ஆயிரம் வாக்குகள் பெற்று மாகாணசபைக்குத் தெரிவாகியிருந்தார். 2001ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குச் சென்றார். இதனூடாக தமிழ் அரசியல் பிரதிநிதித்துவத்தின் தேவை பற்றிய விழிப்புணர்ச்சி தலைநகர மக்களிடம் உருவாகியது எனலாம். இந்நிலையில் தான் இம்முறை தேர்தலில் போட்டியிடும் மனோகணேசனைத் தனித்துப்பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவரது கட்சியின் வாக்குவங்கியில் இம்முறை செல்வாக்குச் செலுத்தக்கூடிய அம்சங்களை நோக்கும் போது, மேல்மாகாணத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் இதுவரை காலமும் பல்வேறு மட்டங்களிலும் பிளவுபட்டு இருந்ததற்கு முக்கிய காரணம் தமிழர்களுடைய வாக்குவங்கி உடைந்திருந்தமையே. அது இம்முறையும் ஆதிக்கம் செலுத்தும் எனலாம்.

அவ்வகையில் எதிர்வரும் மேல்மாகாணசபைத் தேர்தலில் இ.தொ.கா தனித்து களம் இறங்கவுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் பரந்துபட்டு வாழும் தமிழ் மக்களின் நலன்களிலும், மேம்பாட்டிலும் இ.தொ.கா அன்று முதல் இன்று வரை அக்கறை செலுத்தி வருகின்றது. நகர வர்த்தக பிரமுகர்களினதும், சேரிவாழ் மக்களினதும், நலன்களில் நாட்டம் காட்டியுள்ளது. இதன் பிரதிபலிப்பாக வேட்பாளர்களை இம்முறை களத்தில் இறக்கியுள்ளது.

இத்தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகள் பல கட்சிகளுக்கும் சிதறடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களே தோன்றியுள்ளன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தனித்து போட்டியிடுகின்றன. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறைத் தேர்தலில்தான் முதன்முதலாக தனித்துப் போட்டியிடுகின்றது. இக்கட்சி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்தவர்களைக் கொண்டதுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை எதிர்க்கும் கட்சியாக தன்னை வளர்த்து வருகிறது.

அடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு, தலைநகரைப் பொறுத்தவரையில் கணிசமானளவு சிறுபான்மையின மக்களின் ஆதரவு இருக்கிறது. இதுவரை கொழும்பிலிருந்து வந்திருக்கும் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் ஐக்கிய தேசியக் கட்சி பட்டியலிலிருந்தே உருவாகியிருக்கிறது. 2004 நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பிலிருந்து இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவானார்கள். தியாகராஜா மகேஸ்வரன், மற்றும் மனோ கணேசன்.

சிறுபான்மையினரை தமிழர்களை, முஸ்லிம்களை பிரித்துவைப்பதில் காலங்காலமாக பெரும்பான்மையினர் முனைப்புக்காட்டிவந்துள்ளனர். குறிப்பாக தேர்தல் காலங்களில் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவது, இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவளித் தமிழர் என்ற பிரிவினையை ஊக்குவிப்பது போன்றன சாதாரணமான விடயங்கள். அதைவிட மாநகர சபைத் தேர்தலுக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உள்ளன. 2011இல் இடம்பெற்ற மாநகரசபைத் தேர்தலில் கொழும்பில் தனித்துப் போட்டியிட்ட ஜனநாயக மக்கள் முன்னணி 6 ஆசனங்களை வெற்றி கொண்டிருந்தது. இந்த வெற்றி இம்மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் எண்ணத்தை உருவாக்கியிருந்ததோ தெரியாது. ஆனால் இரண்டு தேர்தல் களங்களும் வித்தியாசமானவை. ஏனெனில் மாவட்ட ரீதியிலான மக்கள் தொகை இங்கு விசேடமானது.

தவிர வடமாகாண சபைத்தேர்தல் வெற்றியைப் போன்ற ஒன்றை மேல்மாகாண சபைத் தேர்தலில் எந்தவொருகட்சியும்எதிர்பார்க்கமுடியாது என்பதுதான் உண்மை. ஏனென்றால் வடக்கு, கிழக்கில் பலம் பொருந்திய ஒரேயொரு கட்சிஎன்றால் அது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான். அதுபோல 98 வீதத்துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் வாழும் வடக்கில் வெற்றி என்பது இமாலயம். ஆனால் 11வீதமான தமிழ்மக்கள் வாழக்கூடிய கொழும்பில் அவ்வாக்குகள் யாவும் ஒரே கட்சிக்குத்தான் செல்லும் என்று கணிப்பிட முடியாது. தேர்தலில் வெற்றிபெற்றிருந்த சில அரசியல்வாதிகள் அரசுப்பக்கம் தாவியிருக்கின்ற நிலைமைகளும் இருக்கின்றபடியினால் அவநம்பிக்கை என்பதும் மக்கள் மத்தியில் பொதுவாக இருக்கத்தான் செய்கிறது.

மாநாகரசபைத் தேர்தலை அடிப்படையாக வைத்து மாகாண சபைத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்க் கட்சிகள் கொழும்பில் தனித்துக் களமிறங்குவது வாக்குகளைச் சிதறடிப்பதற்கு காரணமாக அமைந்திருக்கிறது. இது அரசாங்கத்துக்கு சாதகமானதாக அமையும். நாட்டின் வீழ்ச்சியடையும் பொருளாதாரம் நகரங்களில் வாழும் சிங்கள மக்களைக் கூட அரசு மீது நம்பிக்கையிழக்க வைத்துள்ளது. இதனால் தமக்கு எதிரான வாக்குகள் பிரதான எதிர்க்கட்சிக்கு போய்விடாதவரை வாக்குகளை சிதறடிப்பதில் அரசு முனைப்புக் காட்டும் என்பதில் ஐயமில்லை.

அடுத்து இவருக்கு சாதகமாக அமையக்கூடியவிடயமாக இந்தத் தேர்தலில் மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவு உள்ளது. நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரலாற்று ரீதியிலான வெற்றியைப் பெற்றுக்கொண்டது. அத்தேர்தலின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தேர்தல் கால கூட்டு என்று விமர்சிக்கப்பட்ட போதிலும் இங்குள்ள தமிழ்க்கட்சிகள் பல ஒன்றாக நின்று ஒட்டுமொத்த தமிழ்மக்களின் வாக்குகளையும் பெற்று வடமாகாண சபையின் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. மக்களதும், கட்சிகளினதும் ஒற்றுமை முழுநாட்டுக்கும் இன்று உதாரணமாய் மாறியுள்ளது. இத்தேர்தலுக்காய் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தமது ஆதரவை அளித்திருந்தது. நேரடியாகத் தேர்தல் பிரச்சாரங்களில் கூட ஈடுபட்டிருந்தது. இதனால் இத்தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஇக்கட்சிக்கு ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் கொழும்பில் வாழும் தமிழ்மக்கள் வடகிழக்கு மற்றும் மலையகம் சார்ந்தவர்கள் என்று பொதுவாகக் கூறலாம். இதனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் கட்சியை தமிழ்மக்களும் ஆதரிப்பார்கள் என்று கூறலாம்.

மேலும் கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் மனோகணேசன் அவர்களது அரசியல் மற்றும் மக்கள் செயற்பாடுகளும் அவரதுவாக்குவீதத்தில் பங்களிப்புச் செலுத்தும். குறிப்பாக தலைநகர் மற்றும் மலையகத்தில் நடைபெறும் இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல் திருட்டு தொடர்பில் இவர் அதிக கவனம் செலுத்துவதுடன் குரலெழுப்பியும் வருகின்றமை மக்கள் அறிந்ததே. வடக்கில் ஈழக்கட்ட இறுதிப்போரில் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதற்கு எதிராகக் குரலெழுப்பியிருந்தார். ஜனநாயக ரீதியிலானமக்கள்செயற்பாடுகளில் இவர் பங்கெடுத்து வருகின்றார்.

தேர்தல் மாகாணங்களுக்கு வெளியில் இருக்கக்கூடிய தமிழ்மக்களிடம் மேல்மாகாணசபைத்தேர்தலில்கொழும்பு மாவட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணி கட்சி பலம்வாய்ந்த கட்சியாக இருக்கவேண்டியது காலத்தின் கட்டாயம். இம்முறை ஜனநாயக மக்கள் முன்னணி பெறும் வெற்றியானது ஒட்டுமொத்த தமிழ்மக்களினதும் வெற்றியாகும். வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வெற்றியாகவே இது அமையும். வடக்கில் கூட்டமைப்பின் வெற்றி எப்படி இருந்ததோ அதுபோல மேல்மாகாணத்தில் இக்கட்சியின் வெற்றி உறுதி. ஏற்கனவே எல்லாமக்களுக்காகவும் குரல் கொடுத்துவரும் இக்கட்சி இப்போது நல்லதொரு நிலையில் உள்ளது. வன்முறை கட்டவிழ்ப்பு ஜனநாயகமற்ற சூழ்நிலையில் தான் இம்முறை தேர்தல் நடைபெறுகிறது. ஆகவே மேல்மாகாணத்துக்கு வெளியில் வாழும் மக்கள் மேல்மாகாணத்தில் உள்ள தமது உறவுகளுக்கு இக்கட்சிக்கு ஆதரவு தெரிவிக்குமாறு கேட்பதாக இக்கட்சி எமது பத்திரிகைக்கு விசேடமாகத் தெரிவித்திருக்கிறது.

எனவே தமிழ் அரசியல் தலைமைத்துவத்தை தமிழ்மக்கள் வாழ்கின்ற அனைத்துப் பகுதிகளிலும் உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். தமிழ்மக்களின்பிரதிநிதித்துவம் எதிர்கால தமிழ்மக்கள்து பாதுகாப்புக்கு அவசியமானது. இதனால் இதனை அனைத்து வாக்காளர்களும் உணர்ந்து செயற்படுவது அவசியம்.

மறவன்

# பிராந்தியச் செய்திகள்

## வவுனியா பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் பணி பகிஸ்கரிப்பு




வவுனியா பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் ஒன்பது அம்ச கோரிக்கையை முன்வைத்து இன்று(11) காலையில் பணி பகிஸ்கரிப்பு போராட்டமொன்றினை நடத்தினர்.

வவுனியா பொது வைத்தியசாலையின் முன்னால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப் போராட்டத்தில் 6-2006 சுற்றறிக்கையை சரியாக அமுல்படுத்து, சகல தற்காலிக மற்றும் அரய ஊழியர்களை நிரந்தரமாக்கு, 8 மணித்தியால காலவரையறைக்கு மேலதிகமாக கடமைக்கான உரிய கொடுப்பனவ்வை பெற்றுக்கொள்ளல், சீருடை கொடுப்பனவை ஒரே தடவையில் வழங்குதல் உட்பட 9 கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்திருந்தனர். ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போராட்டமானது தைமாதம் 16ஆம் திகதி தாம் மேற்கொண்ட போராட்டத்திற்கு எவ்வித தீர்வும் வழங்கப்பாமையினாலேயே மீண்டும் இக் கேரிக்கைகளை முன்வைத்து போராட்டம் மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

காலை 6 மணியில் இருந்து மதியம் 12 மணிவரை இடம்பெற்ற இப் போராட்டத்திற்கு உரிய பலன் கிடைக்காத பட்சத்தில் தாம் காலவரையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

**தகவலும் படங்களும் :- பாஸ்கரன் கதீசன்**

## யாழ்ப்பாணத்தில் முதலிடம் பெற்ற புகைத்தல்



புகைத்தல் நடவடிக்கையில் யாழ் மாவட்டம் முதலாம் இடத்தில் நிற்பதாக அண்மையில் மேற்கொண்ட அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் கணக்கெடுப்பினைத் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய போதைப் பொருள் புகைத்தலுக்கு எதிரான அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பைத் தொடர்ந்து இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் முதலாம் இடத்தில் யாழ் மாவட்டமும் இரண்டாம் இடத்தில் கொழும்பும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் 43 வீதமானவர்களும் கொழும்பு மாவட்டத்தில் 39 வீதமானவர்களும் புகைத்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்



எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் தொடர்பான கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகக் கொண்டு வரப்படும் தீர்மானத்தினை ஆதரித்து, எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், வலி. வடக்கின் மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தியும், காணாமற் போனோர்கள் மற்றும் இராணுவத்தில் சரணடைந்தவர்களை விடுவிக்க கோரியும் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தப்படவுள்ளதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவித்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல் கட்சியினர், இடம்பெயர்ந்த மக்கள், காணாமல் போனோரின் உறவினர்கள், மனித உரிமைகள் சார்ந்த அமைப்புக்கள் உள்ளிட்ட பல அமைப்புக்கள் கலந்துகொள்ளவுள்ளன.

அத்துடன் இந்த ஆர்ப்பாட்டம் நாடளாவிய ரீதியிலும் பல இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மேலும் தெரிவித்தது.

## வடக்கில் தகவல் திரட்டும் இராணுவம்

வடக்கிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் கற்பிக்கும் ஆசிரியர்கள் விபரங்களையும் படையினர் கோரிப்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக வன்னியிலிருந்து வருகை தந்து யாழில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் விபரங்களும் கோரி அவ்வப்பகுதிகளிலுள்ள படை முகாம் அதிகாரிகளால் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் வடமாகாண கல்வி அமைச்சினதோ அதிகாரிகளினதோ அனுமதியின்றி பாடசாலைகளிற்கு நேரடியாக வருகை தரும் படையினரே அத்தகைய தகவல்களினை கோரி பெற்றுச்செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்பான விபரங்களை இலங்கைப் படையினர் திரட்டி வருவதால் மாணவர்களிடையே அச்சமான சூழல் நிலவி வருகின்றது. பெரும்பாலான மாணவர்கள் பல்கலைக்கழகத்தை அண்டியுள்ள தனியார் வீடுகளில் தனியாகவும், குழுக்களாகவும் தங்கியுள்ளனர். இவ்வாறு தங்கியிருக்கும் மாணவிகளின் விபரங்களையே இராணுவத்தினர் திரட்டிவருகின்றனர்.


## யுத்தத்தின் பின்னும் அறவிடப்படும் பயங்கரவாத வரி



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் (ஆரம்பப்பிரிவு) வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியானது 13.02.2014 (வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் சிரேஷ்ட பாடசாலையின் அதிபர் தி.ம.ச.பத்மநாதன் அவர்களின் தலைமையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவின் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் திரு.ந.சிவசக்தி ஆனந்தனும், சிறப்பு விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

**படங்களும் தகவலும் :- இ.தர்சன்**

## யுத்தத்தின் பின்னும் அறவிடப்படும் பயங்கரவாத வரி



பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை ஈடுசெய்து கொள்வதற்காக அறவிடப்பட்ட நூற்றுக்கு 0.5 வீத வரி தொடர்ந்தும் அறவிடப்படுவது பெரும் அநீதியானது என மக்கள் கவலை வெளிப்படுத்துகின்றனர். பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாக நிதி நிறுவனங்களினால் தெரிவிக்கப்படுகிறது.

காப்புறுதிப் பாதுகாப்புக்களை பெற்றுக் கொள்வதால், குழப்பங்கள், கலவரங்கள் மற்றும் வேலை நிறுத்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான சட்டவிதிகளின் கீழ் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வது சாதாரணமாக தற்போதும் நடைமுறையில் உள்ளது. இவ்விதம் பணம் அறவிடப்படுவதானது வாடிக்கையாளர்களுக்கு விளைவிக்கப்படும் அநீதியென்றே வங்கிகளும், காப்புறுதி நிறுவனங்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

## நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை சீனாவிற்கு விற்கத் திட்டம்



நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை சீனாவின் பொறியியல் இயந்திர நிறுவனத்திற்கு விற்பனை செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார ஊழியர் சங்கங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன. திறைசேரியின் செயலாளர் பி.பீ. ஜெயசுந்தர மற்றும் மின்வலு எரிசக்தி அமைச்சின் உயர் அதிகாரிகள் இது குறித்து கலந்துரையாடியுள்ளனர். அதேவேளை நுரைச்சோலை மின்நிலையத்தை வெளிநாட்டு நிறுவனம் ஒன்று விற்பனை செய்வதை தாம் கடுமையாக எதிர்ப்பதாக இலங்கை மின்சார சபையின் பொறியிலாளர் சங்கம் மற்றும் சுதந்திர பொறியியலாளர்கள் கூட்டமைப்பு என்பன தெரிவித்துள்ளன.

நுரைசோலை அனல் மின்நிலையத்தின் மூலம் நாளாந்தம் 100 மில்லியன் வருவாய் கிடைக்கும் எனவும் இந்த நிலையிலேயே அரசாங்கம் அதனை சீன நிறுவனத்திற்கு விற்பனை செய்ய முயற்சிக்கிறது என இலங்கை மின்சார ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார். அவ்வாறு விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க போவதாகவும் அவர் கூறினார். எவ்வாறாயினும் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை விற்பனை செய்யும் திட்டங்கள் எதுவுமில்லை என மின்வலு எரிசக்தி அமைச்சின் செயலாளர் எம்.சி.பெர்டினன்டோ தெரிவித்தார்.

## மன்னார் புதைகுழியில் மேலும் இரு எலும்புக்கூடுகள்


மன்னார், திருக்கேதிஸ்வரம் மனித புதைகுழி 22 வது தடவையாக நேற்று புதன்கிழமை தோண்டப்பட்ட போது மேலும் 2 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ன தலைமையில் நேற்று புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் மதியம் 1 மணிவரை குறித்த மனித புதைகுழி தோண்டப்பட்டது. இதன் போதே 2 மனித எலும்புக்கூடுகள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 2 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் மீட்கப்பட்டு 3 பெட்டிகளில் பொதி செய்யப்பட்டடு மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இதுவரை மீட்கப்பட்டுள்ள 61 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்களில் 35 மனித எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் இன்று வியாழக்கிழமையும் 23 வது தடவையாக குறித்த மனித புதைகுழி மன்னார் நீதவான் முன்னிலையில் தோண்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## கோலாகலமாக நடைபெற்ற நஸ்ரியாவின் நிச்சயதார்த்தம்



தமிழில் நேரம், நய்யாண்டி, ராஜா ராணி போன்ற படங்களில் நடித்து புகழ் பெற்ற நஸ்ரியா நசீமுக்கும், பிரபல இயக்குனர் பாசில் மகன் பஹத் பாசிலுக்கும் கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நிச்சயதார்த்தம் நடைபெற்றுள்ளது.

பிரபல நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அவர்களின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் மட்டுமே கலந்து கொண்டனர். இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி திருவனந்தபுரத்தில் திருமணம் நடக்க உள்ளது. 24ஆம் திகதி ஆலப்புழையில் வரவேற்பு நடக்க உள்ளது.

பஹத் பாசில், மலையாளத் திரையுலகில் முன்னணி ஹீரோவாக உள்ளார். நஸ்ரியா, தமிழ், மலையாளம் இரு மொழிகளிலும் குறுகிய காலத்தில் மார்க்கெட்டை பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தெய்வக்குழந்தையாக ஹன்சிகா



அரண்மனை படத்தில் தெய்வக்குழந்தையாக நடித்துள்ளாராம் ஹன்சிகா மோத்வானி. கடந்த ஒக்டோபர் முதல் திகதி அரண்மனை படத்தின் படப்பிடிப்பை வெற்றிகரமாக பொள்ளாச்சியில் ஆரம்பித்த சுந்தர்.சி, இந்தப்படத்தை இயக்குவதுடன் அதில் ஹீரோவாகவும் நடித்திருக்கிறார்.

மேலும் இன்னொரு கதாநா யகனாக வினய் நடிக்க, ஹன்சிகா, ஆண்ட்ரியா, லட்சுமிராய் மூன்று பேரும் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள். இதில் தன்னுடைய கரக்டரில் முழு ஈடுபாட்டுடன் நடித்துள்ளாராம் ஹன்ஷிகா. காரணம் படத்தில் அவரது கேரக்டர் ஒரு தெய்வக்குழந்தை மாதிரி.

அதாவது எதிர்காலத்தில் நடக்கபோவதை முன்கூட்டியே உணர்வது மாதிரியான அபூர்வ சக்திகள் கொண்ட பெண். அதிலும் இந்தப்படத்தில் தாவணி கட்டிக்கொண்டு, நெற்றியில் பெரிய அளவில் குங்குமம் வைத்துக்கொண்டு பார்க்கவே வித்தியாசமான ஹன்சிகாவாக இரசிகர்களுக்கு தெரிவாராம். குறிப்பாக க்ளைமாக்ஸ் காட்சியில் ஹன்சிகாவின் நடிப்பு மிரட்டலாக இருக்கும் என்கிறார்கள்.

## ஏ.ஆர் முருகதாஸ், பிரபுதேவா மோதல்



பொலிவுட்டில் பிரபு தேவா மற்றும் ஏ.ஆர்.முருகதாஸ் படத்திற்கு மோதல் ஏற்பட்டுள்ளது. பிரபுதேவா இயக்கத்தில் அஜய் தேவ்கன் ஹீரோவாக நடிக்கும் இந்தி படம் ஆக்ஷன் ஜாக்சன்..

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் அக்ஷய் குமார் ஹீரோவாக நடிக்கும் படம் ஹாலிடே (துப்பாக்கி ரீ-மேக்). இந்த இரண்டு படங்களையும் யூன் 6ம் திகதி ரிலீஸ் செய்ய திட்டமிட்டுள்ளனர் அதன் தயாரிப்பாளர்கள், ஆனால் இந்த இரண்டு படங்களும் ஒரே தினம் வெளியாகி மோதிக் கொள்வதை அஜய் தேவ்கனும், அக்ஷய குமாரும் விரும்பவில்லையாம். ஆனால் படத்தின் தயாரிப்பாளர்கள் தங்களது ரிலீஸ் திகதியில் பிடிவாதமாக இருக்கிறார்களாம்.

## கோச்சடையானுக்கு போட்டியாக 4 படங்கள்



பொங்கலுக்கு வெளிவர வேண்டிய படம் ரஜினியின் கோச்சடையான். ஆனால் அப்போது ஏற்பட்ட தியேட்டர் பிரச்சினை காரணமாக இப்போது ஏப்ரல் 11ஆம்திகதியில் வெளியிடுவதாக அறிவித்துள்ளனர். இதனால் அதே நாளில் வெளியாவதாக இருந்த சில சின்ன பட்ஜெட் படங்களின் ரிலீஸ் தள்ளி வைக்கப்பட்டன. இதனால் உலகமெங்கிலும் 6 ஆயிரம் தியேட்டர்களில் கோச்சடையானை வெளியிட முடிவு செய்துள்ளனர்.

ஆனால், இந்த நேரத்தில் கமலின் விஸ்வரூபம்-2வும் ஏப்ரலில் திரைக்கு வரப்போவதாக கூறப்படுகிறது. தற்போது டப்பிங் பணிகள் நடந்து கொண்டிருப்பதால், அது சாத்தியப்படும் என்கிறார்கள். அதனால், கடந்த பொங்கல் தினத்தில் அஜீத்தும், விஜய்யும் மோதிக்கொண்டதுபோல் இந்த முறை ரஜினியும், கமலும் மோதிக்கொள்ளும் சூழ்நிலைகள் உருவாகியிருக்கிறது.

இதற்கிடையே, விக்ரமின் ஐ, தனுஷின் வேலையில்லா பட்டதாரி, விஷாலின் நான் சிகப்பு மனிதன் ஆகிய படங்களும் ஏப்ரலில் ரிலீசுக்கு தயாராகிக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், ஒரே நேரத்தில் இத்தனை பிரபலங்களின் படங்களும் வெளியானால் தியேட்டர் பிரச்சினை பூதாகரமாக வெடித்து விடும் என்பதால், பேச்சுவார்த்தை மூலம் சில படங்களின் ரிலீசை தள்ளி வைக்கும் முயற்சிகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது.

## இது கதிர்வேலன் காதல் குழு சந்தோசத்தில் மிதக்கிறது



இது கதிர்வேலன் காதல் திரைப்படம் வருகிற பிப்ரவரி 14தேதி காதலர் தினத்தில் வெளியாக உள்ளது.

இப்படத்துக்கு 320 திரையரங்குகளில் வெளியாக உள்ளதால் சந்தோஷத்தில் மிதக்கிறது இது கதிர்வேலன் காதல் டீம் சுந்தரபாண்டியன் படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு எஸ்.ஆர்.பிரபாகரன் இயக்கியுள்ள படம் இது கதிர்வேலன் காதல்.

உதயநிதி ஸ்டாலின், நயன்தாரா முதன் முதலாக இணைந்து நடித்துள்ள இப்படம் யு சான்றிதழ் பெற்று குடும்பத்துடன் பார்க்க கூடிய படமாக இருக்கும் என தெரிவித்துள்ளனர்.

ஹரிஸ் ஜெயராஜ் இசையில் ஏற்கனவே பாடல்கள் வெளியாகி வெற்றிபெற்ற நிலையில் இப்படம் ஆரோ 11.1, டால்.ஃபி அட்மாஸ் தொழில்நுட்பத்தில் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

## விஸ்வரூபம் - 2 இல் அபிராமி



விஸ்வரூபம் 2 படத்தில் பணியாற்றவுள்ளார் அபிராமி. இதில் படத்தில் கமல்ஹாசனுடன் பூஜா குமார், அன்ட்ரியா ஜோடியாக நடிக்கின்றனர். இதில் அபிராமி எந்த கரக்டரிலும் நடிக்கவில்லை. மாறாக, பூஜா குமார் ஏற்று நடித்துள்ள கேரக்டருக்கு குரல் கொடுத்திருப்பவர் அபிராமி தானாம். கணவருடன் அமெரிக்காவில் வாழ்ந்து வரும் அபிராமி விஸ்வரூபம் 2 படத்தின் டப்பிங் வேலைக்காக சமீபத்தில் சென்னை வந்திருந்தார்.

டப்பிங் பேசி முடித்து அமெரிக்கா கிளம்ப இருந்த நேரத்தில் அபிராமிக்கு ஒரு மலையாள படத்தில் நடிக்கவும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது, அந்தப் படம் சுரேஷ்கோபி ஹீரோவாக நடிக்கும் அப்போத்திக்கிரி. அபிராமி நீண்ட இடைவேளைக்குப் பிறகு நடிக்கும் மலையாள படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## சூர்யாவின் படப்பிடிப்பில் ரகளை



அஞ்சான் படத்தில் சூர்யா-சமந்தா இருவரும் முதல் முறையாக ஜோடி சேர்ந்துள்ளனர். லிங்குசாமி இப்படத்தை இயக்குகிறார். இதன் படிப்பிடிப்பு மும்பை பகுதிகளில் நடைபெற்று வருகிறது. சில தினங்களுக்கு முன்னர், சூர்யா, சமந்தா நடித்த பாடல் காட்சியொன்றை படமாக்கினர்.

நடனஇயக்குனர் ராஜுசுந்தரம் இதற்கான நடனத்தை அமைத்து கொடுத்தார். சென்னையில் இருந்து சென்ற நடன கலைஞர்களுடன் சூர்யா, சமந்தா ஆட இக்காட்சி படமாகிக் கொண்டு இருந்தது. அப்போது மும்பையைச் சேர்ந்த இந்தி நடன கலைஞர்கள் கும்பலாக அங்கு வந்தனர். நடன கலைஞர்கள் முப்பது சதவீதம் பேரை மும்பை நடன கலைஞர்கள் சங்கத்தில் இருந்துதான் பணியாற்ற தெரிவு செய்ய வேண்டும். வெளியாட்களை வைத்து படப்பிடிப்பை நடத்தக்கூடாது என்று கோஷம் போட்டார்கள்.

அதோடு நிற்காமல் படப்பிடிப்பை நிறுத்தும்படி ஆவேசமாக கத்தியபடி கலாட்டாவில் ஈடுபட்டனர். படப்பிடிப்பு சாதனங்களை உடைக்கவும் பாய்ந்தனர். இதனால் படப்பிடிப்பில் இடையூறு ஏற்பட்டது. இதையடுத்து அஞ்சான் படக்குழுவினர் ரூ.60 ஆயிரம் அபராத கட்டணம் செலுத்திய பிறகே படப்பிடிப்பை தொடர அவர்கள் அனுமதி அளித்தனர். இதனால் பெரும் பரபரப்பு அவ்விடத்தில் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இரட்டை மகிழ்ச்சியில் மிதக்கும் அனிருத்



சிம்புவின் வாலு திரைப்பட இசைவெளியிட்டு விழா வரும் 14 ஆம் தேதி நடைபெற உள்ளது. அனிருத் பாடிய பாடல் வெளிவர இருக்கும் அதே நாளில் தனுஷின் நடிப்பில் அனிருத் இசையில் வேலையில்லா பட்டதாரி படத்தின் இசையையும் வெளியிட முடிவு செய்துள்ளனர்.. ஒரே நாளில் வெளி வர இருக்கும் தனது இரண்டு படைப்பையும் நினைத்து மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறார் கொலவெறி அனிருத்...

தமிழ் சினிமாவில் முதன்முறையாக நேற்று ஆடியோ டிராக்கை பாடல் காட்சிகளாக அனிருத் வெளியிட்டுள்ளார். ஆக மொத்தத்தில் வர இருக்கும் அனிருத்தின் அதிரடியான பாடல்களுக்காக இரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்..




# கவிதைப் பூங்கா



## பேருந்து தேவதை

எழுநூற்று அறுபத்து
நாலில் கண்டேன்
பச்சை பாவாடை
தாவணியில் கண்டேன்
நெற்றியிலே சாந்துப்
பொட்டுப் பார்த்தேன்
பிஞ்சு விரல்களின்
நகங்களில் மருதாணிப்
பூச்சை இரசித்தேன்
உன் புன்னகையால்
நகைக் கடையின்
பொன் நகையை மறந்தேன்
கையில் உன்னைப் போன்ற
எழில் மிகு குடையை
கண்டேன்
நண்பியோடு கதைக்கும்போது
செந்தமிழ்ப் பேச்சை இரசித்தேன்
உன் கையிலிருந்த புத்தகத்தின்
முன்னட்டையில் உன்
முகவரியைத் தேடினேன்
பரமேஷ்வரா சந்தியில் நீ
இறங்கியபோது
மழைத்துளிகள் விழுவதைக்
கண்டேன்
வானத்து நிலவா இறங்கி
வந்துவிட்டது என
என் உள்ளத்திடம் கேள்வியும்
கேட்டுக் கொண்டேன்

ஆ.முல்லைத்திவ்யன



## முத்தம்

சொல்லாமல்
நீ கேட்கும்
கேள்விகளுக்கு
நான்
கொடுக்கும்
விளக்கம்


மருதங்கேணியூர்
வே.வே அகிலேஸ்வரன்




## அச்சம் ஒழிந்த நாட்டினிலே

கொற்றவர் கொள்கையினை
மாற்றான் மடிமீது
விற்றுவிட விரும்பாத
செந்தமிழ் வீரச்செருக்கள மாந்தர்
கல்லறை மீது
கார்த்திகை தூவி
விண்ணறை ஓது வேட்கையின் கீதம்
விடுதலையைத் தந்துவிட
அச்சமற்ற நாட்டினிலே
அந்நியர் இருக்கார்
அகதியிருக்கார் – யாரும்
வஞ்சிக்க வரம் வேண்டார்
நெஞ்சு நெகிழ்ந்திட
நிறை தமிழ் உலவி
பிஞ்சு மழலை காலத்துக்காய்
ஏற்கும் தாய்மையே
என்னுயிரும் பிறப்பி
நானும் வீழ்ந்திருப்பேன்
இந்த நற்தமிழுக்காய்
அமைதியாய் வீழ்ந்திருப்பேன்
ஆழமாய் விழிமூடி
ஆராரோ பாடிவிடு
அழகான தமிழாலே
வேறாரும் இல்லையினி
தோளோடு அணைத்துக்கொள்
நான் சாகாவரம் பெற

கவிஞர் த. பருத்திதாசன்






## கண்ணீர்த் துளிகள்

பிறர் துயர் அறிந்து
கவிகள் பல வரையும் எனக்கு – என்
காதலின் சோகந்தனை
வரைய முடியவில்லை
தினந்தோறும் என் காதலுக்கு
கவி வரைய நினைக்கையிலே
அவள் அழகிய முகமே – என்
கண்ணீர் திரைகளில் நீந்த
கண்ணீர் காகிதந்தனை நனைக்க
எழுதவந்த கவிவரிகள்
மாயமாய் மறைகின்றன – முடிவோ
என்னவள் ஞாபகங்களும்
கண்ணீர் கறைபடிந்த
வெற்றுக் காகிதமும்தான் – என்
தேடலின் சுகம்
கண்ணீர் காவியம்தான்

கண்ணா
அடம்பன்



## ஓவியங்கள்

ஒரு பாடசாலையில்
ஓவியங்களை வரைந்துவிட்டு
வீடு திரும்பியபோது
மாணவர்களே என்
ஓவியங்களைப் பார்த்துச்
சந்தோஷப்பட்டார்கள்
அழகாய் இருக்கிறதென்று
ஆனால் - இவன் சுவர்களில்
வரைந்த ஓவியங்களை விட
மனிதர்கள் இவன் இதயச்சுவரில்
வரைந்த கண்ணீர் சித்திரங்கள்தான்
ஏராளம் - நீங்கள்
விசாரிக்கக்கூடாது
அந்த சித்திரத்தின் முகவரிகளை
ஏனென்றால் - புன்னகை தவழும்
உங்கள் பிஞ்சு முகங்களில்
என்னால் வந்துவிடக்கூடாது
ஒரு சொட்டுக் கண்ணீர்கூட

உயிரோவியன்



## சமூகப் பெரியவர்களும் மயானத்தில் நிற்கும் புரட்சியாளர்களும்

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் –இங்கு
வாழும் மனிதர்க்கெல்லாம் என்றாராம்
புரட்சிப் புலவர் பாரதியார் – ஆனால்
பசுத்தோல் போர்த்திய புலிகளாய் வாழும்
சமூகப் பெரியவர்கள் – தாம் மட்டும்
உண்டு உடுத்துக் களித்து வாழ்வது
தான் ஏனோ?
விடுங்கள் அதை – இப்போது நாம்
எம்மவர்களென நம்பி ஏமாந்த
நயவஞ்சக நரிகளிடம் வருவோம்
யார் அவர்கள் அவர்களுக்கு ஏன்
இந்த நிலமை
மாற்றம் வேண்டும் மாற்றம் வேண்டும்
என வாய்கிழியக் கத்திச்
சோஷலிச சோவியத்திடமும்
செஞ்சீனாவிடமும்
கையேந்திய நிதியில்
தினமும் நீச்சலடித்துப்
பெயர்ப்பலகை அரசியலாளராய்
நாளும் உண்டு மகிழ்ந்து
உல்லாசமாய் உறங்கித்
தம்மைத்தாமே புரட்சியாளர்களென
விளிக்கும் புரட்சியாளர்கள் தான் அவர்கள்
அதனால்தான் அவர்களுக்கு – இம்
மயானத்தில் நிற்கும் நிலை


வீரப்பதி விநோதன்







# புனைகதைப் புயல்



சிலவேளைகளில் இருந்து படிப்பாள், அப்போதெல்லாம்வதனாவும்கூட இருந்து ஏதாவது செய்து கொண்டிருப்பாள். அதனால் தர்சாவும் உற்சாகமாக படிப்பாள். பரீட்சைக்காலங்களில் தேனீர் வைத்துக்கொடுத்து நீண்டநேரம் படிக்க உதவுவாள். இப்போதெல்லாம் வகுப்பில் முதலாம்பிள்ளை இவள்தான். அதற்கு அண்ணியின் ஊக்கப்படுத்தல் தான் முதற்காரணம் என்றால் மிகை யாகாது. அன்றும் ஏதோ வீட்டு வேலை செய்ய இருப்பதாக கூறியிருந்தாள். தானும் கடைக்கணக்கு பார்க்க என கொப்பியை எடுத்து வியாபாரக்கணக்கை கூட்டிப்பார்த்தாள். பின்னர் கடைக்கு கொடுத்துவிட்ட கணக்கு கொப்பியை மூடிவைத்து விட்டு படுத்துக்கொண்டாள். தங்காவும் படுத்தாள்.

************

கடையைக்கூட்டி திறந்து விளக்கேற்றினான். தமிழ் கடையில் விளையாடிக்கொண்டிருந்தாள். வியா பாரம் வழமைபோல இருந்தது. நேரம் ஏழைத்தாண்டியிருந்தது. மரக்கறி வாங்க புறப்பட்டான்.

"அம்மா கடையப் பாருங்கோ.. சந்தைக்குப்போட்டு வாறன்."

கடைக்குள் வந்த அம்மா

"மோட்டச்சைக்கில் வாங்கிற அலுவல பாத்திட்டு வாவன்."

எடுத்திட்டியளே."

"இல்லை அது ரவிய தேடிக்கண்டு பிடிக்கலாம் எண்டு ரண்டு பேர் வந்தவை அது தான்....."

ராமிற்கு விடயம் விளங்கிவிட்டது. வதனாவைப்பார்த்தான்

"நீங்கள் நிண்டநீங்களே...? ஆர் எவர் எண்டு தெரியாமல் காசக்குடுக்கிறதே...? பேர் ஏதாவது தெரி யுமோ.?"

"போன் நம்பர் எழுதித்தந்தவை உதில கிடக்கிற கொப்பீல பார்.... முன் பக்கத்தில..."

எடுத்துப்பார்த்தான். ரமண... என்ற பெயருடன் கைபேசி இலக்கமும்

**தொடர் - 43**

சும்மா பேக்காட்டுறாங்கள் எண்டு சொல்லுறியோ..."

"அண்டைக்கு உப்பிடித்தான் ஒருசம்பவம் நடந்ததெண்டு பேப்பரில வந்து பாத்தனியளெல்லே... பிறகும்..."

அவன் கோபத்தில் கதைத்தான். அவன் கருத்துப்படி வதனாவும் சேர்ந்து தான் இந்த வேலையில் ஈடுபட்டிருப்பதாக நினைத்தான். அதனால் அவளைப்பார்த்தே பேசினான். ஆனால் அவளும் மறுப்புக் கூறாததால் அவனுக்கு கோபம் அதிகமாக இருந்தது.

# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி




தொகையையும் கொள்வனவுச் சிட்டைகளையும் பார்வையிட்டாள். அப்படிப்பார்க்கும்போது அம்மாவின் கையெழுத்தில் "ரவி---10,000" என எழுதப்பட்டிருந்தது.

ஏன் அப்படி எழுதியிருக்கிறார். அம்மாவுக்கு ஏன் இவ்வளவு பணம், அப்படி அவளுக்கு தெரிய மாமியாருக்கு தேவையிருக்கவில்லை. ஆயினும் சும்மா எழுதவும் மாட்டார்கள். அப்படியானால் என்ன நடந்தது என்று குழம்பினாள். அப்போது

"அண்ணி இண்டைக்கு ரண்டு பெடியள் வந்தாங்கள்...அவங்கள்..."

"என்ன.. ஏதும் சேட்டை விட்டவங்களோ..."

"இல்லை அம்மாகிட்ட அண்ணாவை கண்டுபிடிக்கலாம். ஆரோடையோ கதைக்கவேணும் எண்டெல்லாம் கதைச்சவங்கள்."

"அம்மா ஏதும் சொன்னவவே..."

"இல்ல.."

"அவங்களுக்கேதும் குடுத்தவவே..."

"ஓ.... காசு குடுத்திருக்கவேணும்."

அப்போது தான் அவளுக்கு விடயம் வெளிச்சமானது. ரவி 10,000 என எழுதியிருந்ததை வைத்து வதனா நடந்த விடயம்பற்றி ஊகித்தறிந்து கொண்டாள். ஆனால் அது தொடர்பாக மாமியாருடன் கதைத்தால் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டு விடலாம். அதுதொடரவி 10,000/= என எழுதியிருந்ததை வைத்து வதனா நடந்த விடயம்பற்றி ஊகித்தறிந்து கொண்டாள். ஆனால் அது தொடஉபாக மாமியா ருடன் கதைத்தால் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டு விடலாம். அதுதொடர்பாக மாம னாருடன் கதைத்தால் மாமியாருக்கும், மாமனாருக்குமிடையில் சண்டை ஏற்பட்டு விடும் என்பது தெரியும், ஆயி னும் இதுவிடயம் தொடர்பாக ரகுவிற்கு கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும் என முடிவெடுத்தாள். அப்படிக் கூறும்போது எப்படி இவ்விடயத்தை கையாள்வது என திட்டமிட்டே கூற வேண்டும். இல்லை என்றால் அவனும் ஏதாவது சத்தமிட்டு விட்டால் எல்லாம் சிக்கலாகிவிடும்.

அவன் வாறது உனக்கு விருப்பமில்லை'

என்று தொடங்கி இருவரையும் கதைக்காமல் செய்யும் நிலையைத்தான் தோற்றுவிக்கும் என யதார்த்தமாக சிந்தித்தாள். ஆனால் ஏதாவது விதத்தில் இப்படியான விடயத்தில் அம்மாவைத் தடுக்காவிட்டால் தேவையில்லாமல் ஏமாற்றுக்காரருக்கு காசு போய்ச்சேரும் என்பதால் தக்க நேரம் பார்த்துக் கேட்கவேணும் என்ற முடிவோடு

"ஓ... என்னோட படிச்ச சதீசோட போன் கதைச்சனான். மதியம் போவம் எண்டவன். காச எடுத்து வையுங்கோ, நான் போட்டு வாறன்."

என்றவன், மேசை லாச்சியைத் திறந்து காசெடுத்தான். அதற்கிடையில்கடைக்குள் வந்த வதனாவைக் கண்டதும்

"என்ன ஏதாவது வாங்க வேணுமா?"

"ஓ..... மரக்கறியளோட.... பன டோல், விக்ஸ், சித்தாலேபா, அதோட...... செத்தலும் வேணும்."

"கிற்காட் கிடக்கா?"

"வாங்க வேணும்.. இப்ப 'மொபிற்ரெல்' காட்டும் கூட போகுது. அதுலயும் வாங்குங்கோ."

"எவளத்துக்கு வேண்ட,...?"

"வழமையாய் 'டயலொக்' வாங்கிறது போல வாங்குங்கோவன்."

லாச்சியை பார்த்தவன். எப்படியும் இருபதினாயிரமாவது இருக்கும் என எதிர்பார்த்தான் பதினையாயிரம் தான் இருந்தது.

"என்ன காட் முடிஞ்சுதெண்டுறியள் காசக்காணேல்லை."

"அது நான் எடுத்தனான்."

அம்மா முந்திக்கொண்டு பதிலளித்தாள்.

"என்ன மோட்டச்சைக்கிளுக்கு

இருந்தது. தனது கைபேசியை எடுத்து அந்த இலக்கத்தை டயல் செய்தான். மீண்டும் இலக்கத்தை சரிபார்த்து ஓகே பட்டினை அழுத்தி காதில்வைத்தான். அந்த இலக்கம் பாவனையில் இல்லை என 'மும்' மொழிகளிலும் கூறியது. விடயம் விளங்கியது. போனைக் கையிலெடுத்து பார்த்தான்.

"என்னவாம் கதையன்."

அம்மா ஆர்வமுடன் கூறினாள். கோபத்துடன்

"போன் ஓவ்பில கிடக்கு. ஏமாத்துக்காரருக்கு சும்மா காச தூக்கி குடுத்திட்டிருக்கிறியள்."

"ஏன் அப்படிச் சொல்லுறாய்.... அவங்கள் சிறையிலை இருக்கிற நிறை யப் பெடியளின்ர போட்டோக்கள் வைச்சிருந்தவங்கள். அதிலரவின்ர இல்லை. இன்னும் கிடக்காம் அதில அவன்ரபடம் கிடக்கும் எண்டு சொல்லுறாங்கள். படத்தில காட்டினாப்பிறகு கூட்டிட்டுப்போய் காட்டுறண்டும் சொன்னவங்கள்."

"அப்ப கிடக்கிறதெல்லாத்தையும் எடுத்து வையுங்கோ.. குடுத்துவிட...."

"ஏன்ரா உப்பிடிச் சொல்லுறாய்."

"பின்ன நல்லது எண்டு எல்லாத்தையும் குடுக்கசொல்லுறியளே..."

"அப்ப... அவங்கள்

"இனி என்னைக் கேக்காம ஆருக்கும் ஒண்டும் குடுக்கக்கூடாது..."

அவன் கூறியவுடன் அம்மாவுக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

"என்ர பிள்ளையையும் கொடுத்திட்டு காசையும் கொடுத்திட்டனே.."

ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள். மருமகளுக்கும் அழுகை முட்டிக்கொண்டு வந்தது. அவளும் அழுதாள்.

"இப்பேன் அழுகிறியள். எவ்வளவு காசு குடுத்தியள்."

"பத்தாயிரம்."

"அது பெரிய காசில்லை. நாங்கள் உழைச்ச காசுதானே. நாலு நாள்ள உழைக்கலாம். இனி கவனமாய் இருங்கோ, இப்ப அழாதேங்கோ."

"இவரைப்பாக்கிற ஆசையில தானே மாமி காசுகுடுத்தவ நான் உழைச்சுத்தாறன்."

விம்மலிடை கூறினாள் அவள்.

"ஒருத்தரும் கவலைப் படாதேங்கோ. காசு குடுத்ததுக்கு பேசயில்லை ஏமாந்ததுக்குத்தான் பேசின னான். சரி இண்டைக்கு இப்ப பொருட்கள் வாங்க காசு வேணும்.... அங்க என்ர 'பாக்கில' கிடக்கு இருபதாயிரம் எடுத்து வாங்கோ.."

அவளுக்கு கூறியவன். தாயிடம்......

"நீங்க கவலைப்படாதேங்கோ. இப்பிடி ஏமாத்தி காசு பறிக்க திரியிறாங்கள் எண்டு சிவில் ஆமிக்காரன் சொன்னவன். அது தான் கவனமாயிருங்கோ."

"அது சரி எங்கட விலாசம் தெரிஞ்சுதானேடா வந்து கேட்டவங்கள். அது என்னண்டு."

"எத்தின இடத்த பதிஞ்சனாங்கள். அதில எங்காவது இருந்து எடுத்திருப்பாங்கள்."

"கடவுளே உப்பிடியும் ஏமாத்த வெளிக்கிட்டுட்டாங்களே... கடவுளுக்கும் கண்ணில்லை."

தன் பங்கிற்கு திட்டினாள். அவள் காசு கொண்டுவந்து கொடுத்தாள்.

இதுக்க கிடக்கிறதை எடுத்து வையுங்கோ. 'பிஸ்கற்' கொம்பனிக்காரர் வந்தால் பாத்து வாங்குவம்."

"இம் பாக்கிறன். கொதி யாய் வாங்க. ஆட்டோவில சாமானு கள போட்டுட்டு வாங்கோ...

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## இந்துமத சிந்தனைகள்




மனதின் ஆற்றல் அளவிட முடியாதது. பஞ்ச பூதங்களையும் தாண்டிய ஒருபெரும் பூதம் மனமாகும். பூதம் என்பது ஒரு வேலையைச் செய்துகொண்டே இருக்கும். சும்மா இருக்காது. அதேபோல்தான் மனமும். சும்மா இருக்காது. ஆனால் இது ஒரு விசித்திரமான குட்டிப் பூதம். அறிவுதான் பூதத்தை ஆளவேண்டும். மாறாக பூதம் அறிவை ஆளுகை செய்தால் அழிவுக்கு வித்திட்டுவிடும்.

மனம் நமது கட்டளைக்கு அடிபணியாது. ஆனால் பழக்கத்துக்கு அடிமையாகும் தன்மையுடையது. ''நாளைமுதல் மது அருந்தாதே'' என்று கட்டளையிட்டால் கேட்காது. ஆனால் ஏதாவது தீராத வியாதி வந்துவிட்டால் பல்லைக் கடித்துக்கொண்டு நாம் விரும்பும் வழியில் அதைப் பழக்கப்படுத்தி விட்டால், வழிக்கு வந்துவிடுகிறது. மனதைப் பார்த்து அறிவு எப்படியெல்லாம் சொல்கிறதோ அப்படியே ஆகிவிடும் தன்மை அதற்கு உண்டு. ''எனக்கு இப்போ முன்புபோல் ஞாபகசக்தி இருப்பதில்லை'' என்று நினைக்க ஆரம்பித்தால், மனம் படிப்படியாக ஞாபக சக்தியை இழந்துவிடும். அதே நேரம் ''முன்னரைவிட நான் இப்போ தெளிவாக இருக்கிறேன்'' என்று நினைக்க ஆரம்பித்தால் மனம் அப்படியே ஆகிவிடும்.

இதுதான் மனதின் இயல்பு. மனதை ஒருமுகப் படுத்தினால் அதன் செயலாக்கம் அதிகரிக்கும். அதைவிடுத்து மனம் அலைபாய ஆரம்பித்தால் அதன் செயலாற்றும் திறன் குறையும். உடல் பலமில்லாதவனை பலமுள்ளவன் அடித்து வீழ்த்துவதைப் போல, மனோ பலம் இல்லாதவனையும் மனோ பலம் உள்ளவன் அடக்கியாள்வான். அதனால்தான் ''ஒருவனுடைய நண்பனும் பகைவனும் அவனது மனமே'' என்கிறது கீதை.

## நட்பு பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்



நல்ல நண்பன் கஸ்தூரி வியாபாரியைப் போலாவான். கஸ்தூரி வியாபரி உனக்கு அதனை (இனாமாகத்) தரலாம். அல்லது நீ அதனை அவனிடமிருந்து விலை கொடுத்து வாங்கலாம். அல்லது ஒருவேளை அவனிடமிருந்து நீ நறுமணத்தையாவது நுகரலாம். கெட்ட நண்பன் துருத்தியில் ஊதுகின்ற கொல்லனைப் போலாவான். அவன் உனது ஆடையை எரித்து விடலாம். அல்லது நீ அவனிடமிருந்து துர்நாற்றத்தை நுகருவாய்.

தனிமனித சீர்திருத்தத்திற்கும் சீரழிவுக்கும் உள்ளமும் சூழலும் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. மேற்குறிப்பிட்ட ஹதீஸ் தனிமனித வாழ்வில் சூழல் ஏற்படுத்தும் பாதிப்புப் பற்றி விளக்குகிறது. நபி அவர்கள் அதனை அழகிய உதாரணத்தினூடாக விளக்குகிறார்கள். சூழல் எனும் போது பெற்றோர், உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றனர். ஒரு குழந்தையின் வாழ்வில் ஆரம்பமாக பாதிப்பை ஏற்படுத்துவோர் பெற்றோர்களாவர் எனவே தான் நபி அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் : ''ஒவ்வொரு குழந்தையும் இஸ்லாத்தில் தான் பிறக்கிறது. அதனது பெற்றோர்களே அதனை யஹூதியாக, கிறிஸ்தவராக, நெருப்பு வணங்கியாக மாற்றி விடுகின்றன.''

பெற்றோருக்கு அடுத்தபடியாக, உற்றார் உறவினரை விட நண்பர்களால் ஒரு பிள்ளை பாதிப்படைகிறது. பால்ய வயதை அடைவதற்கு முன்பே அது கூடி விளையாடுவதற்கு நண்பர்களைத் தேடுகிறது. நட்பு கிடைக்கும் பட்சத்தில் அது உள அமைதி அடைகிறது. நட்புக்குத் தடையாக பெற்றோர் அமைகின்ற போது அது உளச் சிக்கலுக்கும் உள இறுக்கத்திற்கும் ஆட்படுத்தப்பட்டு, வேண்டத்தகாத விளைவுகளை குடும்பத்தில் தோற்றுவிக்கிறது. அநேகமாக பெற்றோரின் வழிகாட்டல் இன்றிய நட்புத் தேடல் படுமோசமான பாதிப்புகளை ஆறாத வடுக்களாய் பிள்ளைகளிடம் விட்டுச் செல்கிறது. இஸ்லாம் எனும் வாழ்க்கை நெறியை நட்புத் தேடலையும் நெறிப்படுத்தி வழிகாட்டியிருப்பது எம்மை வியப்பிலாழ்த்துகிறது.

நபித்துவ வழிகாட்டலின் வெளிச்சத்தில் நட்புத் தேடலை விளங்க முயற்சிப்போம். நண்பர்களை எக்கோணத்திலிருந்து விளங்கினாலும் கூட அவர்களை இரு வகையாக அமைகின்றனர். நல்ல நண்பர்கள் கெட்ட நண்பர்கள். நல்ல நண்பன் தனது நட்பை முதலில் எவ்வித பேரமும் பேசலும் இன்றி, முன் நிபந்தனையின்றி விரிந்த மனப்பான்மையுடன் கருமித்தனம் ஏதுமின்றி அள்ளி வழங்கத் தயாராக இருப்பான். இவன் கஸ்தூரியை இனாமாக வழங்குபவன் போலாவான். சிலபோது பிறரினால் இவன் வஞ்சிக்கப்படலாம். அப்பாவியாகக் கருதப்படலாம். நல்ல நண்பன் தனது தரத்தினை பெறுமதியாகக் கருதுகிறான். தனது சிந்தனை ஆன்மா, பண்பாடு, நடத்தை, ஒழுக்கம் விழுமியம் என்பனவற்றை இலவசமாகக் கொடுத்துக் கிராக்கியைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. தனது ஆளுமைப் பண்புகள் இதர மனிதர்களால் மாசுபடுவதை இம்மியளவும் விரும்புவதில்லை. எனவே, அவன் தனது நட்பை நாடி வரும் மனிதர்களை நோக்கி முன் நிபந்தனை உறுதிப்பிரமாணம் என்பனவற்றின் அடிப்படையில் நகருகிறான்.

எனது நல்ல நண்பர்களுக்கு உங்களால் மாசு கற்பிக்கப்படும் போது கெட்ட பாதிப்பு ஏற்படும் போது உங்களுடன் உள்ள நட்பை முறித்துக் கொள்வேன் என்று பேரம் பேசி நட்பைப் பகிர்ந்து கொள்கிறான். இவன் பணத்திற்கு கஸ்தூரியை விற்பனை செய்பவன் போலாவான்.

## சோதனைகளைப் பொறுத்துக்கொள்ளுங்கள்



யோபு கடவுளுக்கு மிகவும் பிரியமானவராக இருந்தார். ஏராளமான பொருள் வைத்திருந்த அவருக்கு ஏழு மகன்களும், மூன்று மகள்களும் இருந்தனர். சாத்தான் யோபின் மீது கவனம் வைத்தான். ஒருமுறையாவது கடவுளைத் தூஷிக்க வைக்க வேண்டும் என்று திட்டமிட்டான். கடவுளிடம் நேரில் சென்று, ''ஆண்டவரே! யோபுவைச் சோதிக்க எனக்கு அனுமதி தர வேண்டும்'' என்று கேட்டான். ''அவனுக்கு தனிப்பட்ட வகையில் துன்பம் தராமல், உடமைகளை மட்டும் அழித்து விடு'' என அனுமதியளித்தார். சாத்தான் மகிழ்வுடன் யோபுவனின் உடமைகளான ஆடு, மாடு, ஒட்டகம், பயிர்களை அழித்தான். அவனது வேலையாட்கள் கொல்லப்பட்டனர். வீடு இடிந்து பத்து பிள்ளைகளும் இறந்தார்கள்.

யோபு கதறினான். தன்னிடமிருந்த ஒரே சால்வையையும் கிழித்துவிட்டு, என் தாயில் கர்ப்பத்தில் இருந்து வந்தேன். நிர்வாணியாய் திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். அவர் நாமத்திற்கு ஸ்தோத்திரம், என்று மட்டும் சொன்னான். கடவுளைக் குறை கூறவே இல்லை. இருந்தும், சாத்தான் அவனை விடவில்லை. யோபுவின் உடலுக்கும் துன்பம் தர ஆண்டவரிடம் அனுமதி பெற்றான். உயிரை மட்டும் எடுக்கக்கூடாது என்ற நிபந்தனை விதித்தார் கடவுள். யோபுவின் உடலில் கட்டிகள் தோன்றின. அவனால் வேதனை தாங்க முடியவில்லை. யோபுவின் மனைவி நீர் இன்னும் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறீரோ? கடவுளைத் தூஷித்து உயிரை விடும் என்றாள். யோபுவின் நண்பர்கள் அவனிடம் நீ கடவுளுக்கு எதிராக ஏதேனும் பாவம் செய்தாயோ? என்றனர்.

யோபுவோ நான் எக்குற்றமும் செய்யவில்லை. கடவுள் என்னிடம் பேசினால் தான் அதை விளக்க முடியும் என்றான். இதையடுத்து கடவுள் அவனிடம் பேசினார். நான் உலகத்தைப் படைக்கும் போது நீ எங்கிருந்தாய்? உனக்கு நான் படைத்த பறவைகளையும் மிருகங்களையும் பற்றி தெரியுமா? என்றார். யோபு கடவுளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் மனிதன் என்பதால் பதில் ஏதும் சொல்லவில்லை. எல்லாவற்றிலும் கடவுள் செய்வதே சரி என்று ஒப்புக் கொள்ளும் ஞானத்தை கடவுள் அவனுக்கு அளித்தார். சோதனைகளைப் பொறுத்துக்கொண்ட அவனுக்கு கடவுள் இரட்டிப்பு ஆசிர்வாதத்தை அளித்தார். அவனுக்கு ஏழு மகன்களும், மூன்று மகள்களும் பிறந்தார்கள். இதன்பிறகு யோபு 140 வயது வரை வாழ்ந்து நான்கு தலைமுறை பேரப்பிள்ளைகளைக் கண்டான். பூரண வயதுள்ளவராய் வாழ்ந்து மரித்தார். கடவுள் எவ்வளவு சோதனை கொடுத்தாலும் அவரை தூஷிக்கக்கூடாது. அவர்களுக்கு நீண்ட ஆயுளும், இழந்த செல்வமும் கிடைக்கும்.

## வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நற்சிந்தனைகள்

* நமது வழி பூரணத்தை அடையும் வழியாக இருக்கட்டும், விட்டுவிட்டு ஓடிவிடும் வழியாக இருக்க வேண்டாம் போரில் வெற்றி பெறுதல் நமது நோக்கமாக இருக்கட்டும், எல்லாப் போராட்டத்திலிருந்தும் தப்பிச் செல்லுதலாக இருக்க வேண்டாம்.

* யோகத்தின் மூலம் நாம் பொய்மையிலிருந்து உண்மைக்கும், பலவீனத்திலிருந்து சக்திக்கும், துன்பம் துயரத்திலிருந்து பேரின்பத்திற்கும், அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரத்திற்கும், மரணத்திலிருந்து அமர நிலைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், குழப்பத்திலிருந்து தெளிவிற்கும், அபூரணத்திலிருந்து பூரணத்திற்கும், பிரிவிலிருந்து ஐக்கியத்திற்கும் உயராம்.

* நமது அஞ்ஞானத்தினால், புறத் தோற்றத்தைக் கொண்டு தவறான முடிவு செய்துவிடுகிறோம் இரகசியமாக உள்ளே உறையும் இறைவனைக் காணத் தவறிவிடுகிறோம். ஆனால் ஞானிகள் இந்தத் தவற்றைச் செய்வதில்லை. அவர்கள் பார்வை அகங்காரத்தால் மறைக்கப்படாததால் அவர்கள் உண்மையைக் கண்டு கொள்கின்றனர் இங்கு குறுகிய மனித இயற்கையில் கட்டுண்டிருப்பவனே இறைவனாக நாம் வணங்கும் எல்லையற்ற பரஞ்சோதிப் பொருள் என்பதை அறிகின்றனர். படைப்புகளுக்கு மேல், உலகங்களுக்கு அப்பால், அவனுடைய பரமேஸ்வர நிலையை அவர்கள் உணர்கிறார்கள்.

அதே சமயம் உலகிடை அந்தர்யாமியாக இருக்கும்போதும் அவன் சர்வேஸ்வரனே என்பதையும் அறிந்துகொள்கிறார்கள். உலகில் நானா விதமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்காகத் தன்னிச்சையாகவே இறைவன் தன் சக்திகளைச் சுருக்கிக் கொள்கிறான்.


*05 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

*சாதித்தது. தற்போது ஏனைய நாடுகள் எதிர்ப்பைத் தெரிவிக்க அமெரிக்கா எதிர்க்கிறது. அரசியலில் எல்லாம் சகஜம் என்று சொல்லுவார்கள். ஆனால் இன்று மஹிந்தராஜபக்ஷ அவர்களைபயமுறுத்தி தன்னுடைய வேண்டுகோளுக்கு இசைவுபடுத்த அமெரிக்கா முயற்சித்து வருகிறது.*

*இதைத்தவிர தமிழீழவிடுதலைப்புலிகள் மீதோ அதன் தலைவர் பிரபாகரன் மீதோ பொதுமக்கள் மீதோ கரிசனை காட்டுவது போன்ற பாசாங்கை அமெரிக்கா ஏன் காட்டிவருகிறது? சர்வாதிகாரியான அமெரிக்கா தான் கூறும் விடயங்களுக்கு செவிசாய்க்காவிட்டால் ஏனைய நாடுகளான ஜேர்மனி, ரஷ்யா, சிரியா, ஈராக், ஈரான், பாகிஸ்தான், ஈரான், ஜப்பான் போன்ற நாடுகளுக்கு நடந்த நிலைமைதான் இலங்கைக்கும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.*

# அறிவியல் உலகம்

## மனித தோலில் இருந்து குருத்தணுக்கள்: மகத்தான சாதனை



மனித தோலில் உள்ள அணுக்களில் இருந்து குருத்தணுக்களை (ஸ்டெம் செல்) உருவாக்கும் நெடுநாள் ஆராய்ச்சியில் அமெரிக்க- ஜப்பானிய மருத்துவ ஆராய்ச்சி குழுவினர் வெற்றியடைந்துள்ளனர்.

பிறந்த குழந்தையின் வயிற்றில் இருக்கும் தொப்புள் கொடியில் தாயின் கருப்பயில் வளர்ந்த ஏராள மான குருத்தணுக்கள் தேங்கியுள்ளன. எனவே, இவற்றை சேமித்து வைப்பதன் மூலம் பின்நாட்களில் அந்த குழந்தை முதுமை அடையும்போது ஏற்படும் கொடிய நோயின் தாக்கத்தை எதிர்த்து போராட இந்த குருத்தணுக்களை பயன்படுத்த முடியும் என மருத்துவர்கள் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர். இதையும் கடந்து, செயற்கை முறையில் குருத்தணுக்களை உருவாக்கும் ஆராய்ச்சியில் மாசாச்சூசெட்ஸ் மருத்துவ பல்கலைக்கழகத்தின் முன்னேறிய குருத்தணு ஆராய்ச்சி கூடத்தில் பணியாற்றும் அமெரிக்கா மற்றும் ஜப்பானை சேர்ந்த டொக்டர்கள் கூட்டாக ஈடுபட்டிருந்தனர்.

இதற்காக பரிசோதனை கூடத்தில் வளர்க்கப்படும் எலிகளின் மேல்தோலில் உள்ள உயிரணுக்களை எடுத்து வீரியம் குறைந்த சிட்ரிக் அமிலக் கலவையில் சுமார் அரை மணி நேரம் ஊற வைத்து காத்திருந்தபோது அந்த வியத்தகு மாற்றம் நிகழ்ந்தது. அமிலத்தில் ஊறிய அந்த உயிரணுக்களில் இருந்து புதிய கரு முளை (எம்ப்ரியோ) உருவானது. இந்த கருமுளையை வைத்து குருத்தணுவை உருவாக்கும் சோதனை முயற்சியும் வெற்றி பெற்றதால், இதே முறையில் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட மனித தோலையும் சோதித்து பார்த்தனர்.

இதிலும், எலியின் தோலில் இருந்து எடுக்கப்பட்ட உயிரணுவில் நிகழ்ந்த அதே மாற்றம் ஏற்பட்டதை கண்டனர். இப்படி செயற்கை முறையில் உருவாக்கி உயிரூட்டப்படும் குருத்தணுக்களை கொண்டு பார்கின்சன் நோய் எனப்படும் முதியோர்களுக்கு உண்டாகும் நடுக்குவாதம் உள்பட இதய நோய் வரை பல பாதிப்புகளுக்கு நோயாளியின் தோலை கொண்டே சிகிச்சை அளிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், இந்த வியத்தகு மருத்துவ முன்னேற்றத்தில் சில பின்னடைவுகளும் இருப்பதாக கூறப்படுகிறது.

## புதிய பயனர் இடைமுகத்துடன் Mozilla Firefox அறிமுகம்




உலகின் பிரபலமான இணைய உலாவிகளுள் ஒன்றாகத் திகழும் Firefox உலாவியின் மற்றுமொரு பதிப்பினை Mozilla நிறுவனம் வெளியிட்டுள்ளது. Windows. Mac மற்றும் Linux கணனிகளில் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள Firefox Aurora எனப்படும் இப்புதிய பதிப்பானது புதிய பயனர் இடைமுகத்தினையும், Firefox Sync எனும் வசதியையும் உள்ளடக்கியுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு மேலாக வடிவமைக்கப்பட்டு வந்த புதிய பயனர் இடைமுகத்தினைக் கொண்ட இப்புதிய பதிப்பு Firefox உலாவியின் 29வது பதிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.


## அப்பிளின் iOS 7.1 பதிப்பு அடுத்த மாதத்தில்




அப்பிள் நிறுவனம் தனது புதிய iOS இயங்குதளத்தின் புதிய பதிப்பான iOS 7.1 இனை எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சில தினங்களுக்கு முன்னர் iOS 7.1 Beta 5 பதிப்பினை வெளியிட்டிருந்த நிலையிலேயே இத்தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இதற்கு முன்னர் வெளியிடப்பட்டிருந்த iOS 7 ஆனது பல்வேறு வகையிலும் பயனர்களைக் கவர்ந்துள்ள நிலையில் புதிய வசதிகள் உள்ளடங்கலாக வெளிவரவுள்ள iOS 7.1 இயங்குதளத்திற்கு பலத்த எதிர்பார்ப்பு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மகத்தான சாதனை படைத்த Twitch





உலகின் முன்னணி ஹேம் பிளார்ட்போர்மாக திகழும் Twitch ஆனது ஒரு மாதத்தில் ஒரு மில்லியன் வரையான பயனர்களை எட்டிவருவதாக தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் ஒரு மில்லியன் பயனர்களினூடாக மாதாந்தம் 45 மில்லியன் பார்வையாளர்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்நிறுவனம் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அடுத்த தலைமுறைக்கான Sony PlayStation 4 Twitch அப்பிளிக்கேஷனை அறிமுகம் செய்திருந்தது. அத்துடன் 20 சதவீதமான Twitch ஒளிபரப்பாளர்கள் சொந்தமாக PlayStation 4 சாதனத்தைக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவீன தொழில்நுட்பத்துடன் HTC அறிமுகப்படுத்தும் M8 Mini ஸ்மார்ட் கைப்பேசி



கைப்பேசி உற்பத்தியில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ள HTC நிறுவனம் M8 Mini எனும் புதிய கைப்பேசி ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளது.

4.5 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது Quad-Core Snapdragon 400 Processor பிரதான நினைவகமாக 1GB RAM ஆகியவற்றினைக் கொண்டுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 16GB சேமிப்பு நினைவகத்தினைக் கொண்டுள்ளதுடன் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா மற்றும் 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா ஆகியனவும் தரப்பட்டுள்ளது.

இக்கைப்பேசியானது கூகுளின் Android4.4.2KitKat இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## நொக்கியாவின் புதிய அறிமுகம்




நொக்கியா நிறுவனமானது இதுவரையில் சிம்பியின் மற்றும் விண்டோஸ் இயங்குதளங்களை அடிப்படையாகக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசிகளையே அறிமுகம் செய்து வந்தது. இந்நிலையில் இந்த மாத இறுதியில் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட தனது முதலாவது ஸ்மார்ட் கைப்பேசியை வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Nokia X எனும் இக்கைப்பேசி தொடர்பான தகவல்கள் சில மாதங்களுக்கு முன்னரே வெளியாகியிருந்த போதிலும் தற்போது அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீண்டும் மக்கள் மத்தியில் நொக்கியா கைப்பேசிகள் பலத்த வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கலாம்.

## நீரழிவு நோய்க்கான மருந்து தயிர்



தயிர் சாப்பிட்டால் நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு குறையும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். டைப்-2 நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பை 28 சதவிகிதம் குறைக்கும் சக்தி தயிருக்கு உண்டு என்பதை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.

இலண்டன் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் முன்னணி விஞ்ஞானியாக செயல்பட்டுவரும் டாக்டர் நிரா பரோஹி, குறைந்த கொழுப்பு சத்து கொண்ட பால் புளிப்பு பொருட்களின்(தயிர்) அனைத்து வகைகளும் மற்றும் குறைந்த கொழுப்பு கொண்ட சீஸ் வகைகளும் நீரிழிவு நோய் வருவதற்கான 24 சதவிகித வாய்ப்பைத் தடுக்கின்றன என்று கண்டுபிடித்துள்ளார்.

உயர்ரக புரதம், விட்டமின்கள் மற்றும் கனிமங்களுக்கு பால் பொருட்கள் ஒரு முக்கிய ஆதாரமாக இருக்கின்றன. ஆனால் கொழுப்பு சத்தும் அதில் நிறைவாக இருப்பதால் உணவு விதிமுறைகள் மக்களை இவற்றைக் குறைவாக உபயோகிக்கும்படி தெரிவிக்கின்றன. ஆயினும் குறைந்த கொழுப்பு கொண்ட மற்ற பால் உற்பத்திப் பொருட்களுடன் 85 சதவிகித அளவு தயாரிக்கப்படும் தயிரினை ஆய்வு செய்யும்போது நீரிழிவினைத் தவிர்ப்பதற்கான அதிக அளவு வாய்ப்பு இதில் தென்பட்டுள்ளது.

இந்த சோதனை தனியாரிடத்தில் மேற்கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர மற்ற சிற்றுண்டிகளுக்குப் பதிலாக எடுத்துக்கொள்ளப்படும் தயிரும் நீரிழிவைக் குறைக்க உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகை முடிவுகள் சோதனைகளால் நிரூபிக்கப்படவில்லை என்றபோதிலும் புளிக்க வைக்கப்பட்ட பால் பொருட்களில் விட்டமின்-டி, கல்சியம், மக்னீசியம் போன்ற சத்துகள் உள்ளன. மேலும் நொதித்தல் பலனாக உருவாகும் விட்டமின்-கே, புரோபயாடிக் பக்டீரியாக்கள் நீரிழிவு நோய்க்கெதிரான நல்ல பலன்களைத் தரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்க்கரை மற்றும் சர்க்கரை கலந்த பானங்கள் நமது உடலுக்குக் கெடுதலை ஏற்படுத்தும் என்பதற்கான சான்றுகள் நமக்கு அதிகம் கிடைக்கும்போது தயிர் மற்றும் குறைந்த கொழுப்பு கொண்ட பால் பொருட்கள் நமது உடலுக்கு நன்மை தரும் என்று தெரிவிக்கும் இத்தகைய ஆய்வுகளும் நமது சுகாதாரத்திற்கு உறுதியளிக்ககூடிய ஒன்றாகும் என்று மருத்துவர் பரோஹி கூறியுள்ளார்.

# விளையாட்டு உலகம்



## சாதனை படைக்க காத்திருக்கும் பிராட் ஹாக்



உலக கிண்ண டுவென்டி 20 தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் 43 வயதான பிராட் ஹாக் இடம்பெற்றுள்ளார்.உலக கிண்ண டுவென்டி 20 தொடர் வங்கதேசத்தில் மார்ச் 16ம் திகதி முதல் ஏப்ரல் 6ம் திகதி நடைபெறுகிறது. இதற்கான 15 வீரர்கள் கொண்ட அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 43 வயதான ஆல் ரவுண்டர் பிராட் ஹாக் இடம் பிடித்துள்ளார். இவர் கடந்த 2012ம் ஆண்டில் நடந்த உலக கிண்ணத் தொடரில்(டுவென்டி 20) கடைசியாக விளையாடினார், இதன்பின் அவுஸ்திரேலிய அணிக்காக பங்கேற்கவில்லை. சமீபத்தில் நடந்த பிக்பாஷ் தொடரில் சிறப்பாக விளையாடியதே, அணியில் இடம்பெற காரணமாக அமைந்துள்ளது.

இத்தொடரில் பிராட் ஹாக் களமிறங்கினால், டுவென்டி- 20 வரலாற்றில் அதிக வயதில் விளையாடிய வீரர் என்ற பெருமை பெறுவார். மேலும் 39 வயதான பிராட் ஹாட்ஜ்க்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது, இவரும் பிக்பாஷ் தொடரில் சிறப்பாக விளையாடியதே அணியில் இடம்பிடித்ததற்கு காரணமாகும். அணி விவரம்: ஜார்ஜ் பெய்லி(அணித்தலைவர்), கிறிஸ்டியன், கவுல்டர் நைல், பால்க்னர், பின்ச், ஹாடின், ஹாக், ஹாட்ஜ், மேக்ஸ்வெல், முரிஹெத், மிட்சல் ஜான்சன், ஸ்டார்க், வார்னர், வாட்சன், ஒயிட்.

## பரபரப்பான போட்டியில் இலங்கை வெற்றி



இலங்கைக்கு எதிரான முதலாவது சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் வெற்றியொன்றைப் பதிவு செய்ய கடுமையாகப் போராடிய வங்காளதேசம் இறுதிப் பந்தில் அந்த வாய்ப்பைத் தவறவிட்டுள்ளது. வங்காள தேசத்திற்கு எதிரான முதலாவது சர்வதேச இருபதுக்கு20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை 2 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

சிட்டகொங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை 7 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட்டை இழந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரத்ன டில்ஷான் ஓட்டமின்றி ஆட்டமிழந்தார். அணித்தலைவர் டினேஷ் சந்திமால், குமார் சங்கக்கார, சீகுகே பிரசன்ன ஆகியோர் வங்களாதேச வீரர்களின் அபார பிடியெடுப்பில் ஆட்டமிழந்தார்கள்.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய குசல் ஜனித் பெரேரா தனது நான்காவது சர்வதேச இருபதுக்கு20 அரைச்சதத்தைக் கடந்தார். இறுதி நேரத்தில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய நுவன் குலசேகர 21 பந்துகளில் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 31 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இலங்கை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றி இலக்கான 169 ஓட்டங்களை நோக்கி பதிலளித்தாடிய வங்காள தேசம் சார்பாக முதல் விக்கெட்டில் 52 ஓட்டங்கள் பகிரப்பட்டன. தமிம் இக்பால் 30 ஓட்டங்களையும், சம்சுர் ரஹ்மான் 22 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

ஷகிப் அல் ஹசன் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய அனாமுல் ஹக் 58 ஓட்டங்களைப் பெற்று இலங்கைக்கு சவால் விடுத்தார். இதன் போது கடைசி ஓவரில் வங்களாதேசம் வெற்றிபெற 21 ஓட்டங்கள் தேவையாக இருந்ததுடன் 3 பௌண்டரிகளை விளாசிய அனாமுல் ஹக் இறுதிப் பந்தில் ஆட்டமிழக்க வெற்றி இலங்கை வசமானது. இதன்படி 2 போட்டிகள் கொண்ட இந்த சர்வதேச இருபதுக்கு20 கிரிக்கெட் தொடரில் 1-0 எனும் கணக்கில் இலங்கை முன்னிலை வகிக்கிறது.

## இந்தியாவுக்கு வருகிறது வங்கதேச அணி



இந்தியாவில் முதன் முறையாக வங்கதேச அணி டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது.
கடந்த 1988ம் ஆண்டு முதல் இந்திய அணி, வங்கதேசத்துடன் ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இருப்பினும் 2000ம் ஆண்டில் தான் முதன் முறையாக டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. இதுவரை நடந்த நான்கு தொடர்களிலும்(7 டெஸ்ட், 6ல் இந்தியா வெற்றி, 1 டிரா) இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த போட்டிகள் அனைத்தும் வங்கதேசத்தில் தான் நடந்தது.

இதற்கிடையே 2014ம் ஆண்டு ஜூன் மாதம் ஒருநாள் தொடரில் பங்கேற்க வங்கதேசம் செல்லும் இந்திய அணி, 2015 ஜூனில் டெஸ்ட், ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இந்நிலையில் 2016ல் முதன் முறையாக இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரில் பங்கேற்க வருகிறது வங்கதேச அணி. அதாவது 2016ல் இந்தியாவில் நடக்கும் டுவென்டி20 உலக கிண்ணம், சாம்பியன்ஸ் லீக் தொடருக்கும் இடையில் கிடைக்கும் நாட்களில் இத்தொடர் நடக்கும்.

வங்கதேச கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் நஜ்முல் ஹசன் கூறுகையில், பெரிய அணிகளுடன் அதிக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்பது தான் முக்கிய நோக்கம். அடுத்த 7 ஆண்டுகளில் குறைந்தது 50 டெஸ்டில் விளையாட திட்டமிட்டுள்ளோம். இவற்றில் வெற்றிபெறும் பட்சத்தில், தர வரிசையில் முன்னேற்றம் அடையலாம்

## பாகிஸ்தான் அணியில் புதிய மாற்றங்கள்



நிதி மோசடி தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸகா அஷ்ரவ் அதிரடியாக நீக்கப்பட்டதை தொடர்ந்து அணியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்பிரகாரம் பாகிஸ்தானின் புதிய பயிற்றுவிப்பாளராக மொயின் கான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் தேர்வுக்குழுவின் தலைமை நிர்வாகியான அமிர் சொஹைல் நீக்கப்பட்டு, முன்னாள் கிரிக்கெட் வீரர் அஸார் கான் இடைக்கால நிர்வாக தெரிவுக்குழு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 8 பேர் அடங்கிய நிர்வாகக்குழுவினால் இந்த தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.உலக கிண்ண இருபதுக்கு-20 போட்டிகளுக்கான புதிய களத்தடுப்பு பயிற்றுனராக சொயப் மொஹமட் தெரிவாகியுள்ளார்.

## காலிறுதியில் சோம்தேவ்



ஏ.டி.பி., சாலஞ்சர் தொடரின் காலிறுதிக்கு இந்தியாவின் சோம்தேவ் முன்னேறினார். ஆண்களுக்கான ஏ.டி.பி. சாலஞ்சர் தொடர் கோல்கட்டாவில் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், ரஷ்யாவின் அலெக்சாண்டரை 6:3, 6:3 என்ற நேர் செட்களில் வீழ்த்தி, காலிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு போட்டியில் இந்திய வீரர் யூகி பாம்ப்ரி, ரஷ்யாவின் எவ்ஜெனியிடம் 3:6, 4:6 என வீழ்ந்தார். இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சனம் சிங், சாகித் மைனேனி ஜோடி, பிரான்சின் லூகாஸ், ஜப்பானின் சொய்டா ஜோடியை 6:3, 6:3 என வீழ்த்தி, அரையிறுதிக்கு முன்னேறியது. மற்றொரு இரட்டையர் பிரிவின் காலிறுதியில் இந்தியாவின் திவிஜ் சரண், விஷ்ணுவர்தன் ஜோடி, சீன தைபேயின் பெங், யாங் ஜோடியை 6:3, 7:6 என வென்று, அரையிறுதிக்குள் நுழைந்தது.

## இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் மீதான தடை நீக்கம்



இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் மீதான தடையை சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் நீக்கியுள்ளது. இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தேர்தல் ஒலிம்பிக் சாசனப்படி நடக்கவில்லை, அதாவது ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியவர்கள் தேர்தலில் போட்டியிடக்கூடாது என்ற சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலின்(ஐ.ஓ.சி.) விதிமுறை அதில் கடைபிடிக்கப்படவில்லை.

ஊழல் புகாரில் சிக்கிய அபய் சிங் சவுதாலா, லலித் பனோட் உள்ளிட்டோர் நிர்வாகிகள் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

இதனை ஏற்க மறுத்த ஐ.ஓ.சி, இந்திய ஒலிம்பிக் சங்கத்தை 2012-ம் ஆண்டு டிசம்பர் 5ம் திகதி இடைநீக்கம்(சஸ்பெண்டு) செய்தது. இதைத் தொடர்ந்து பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு ஐ.ஓ.சி. யின் புதிய சட்ட விதிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி தேர்தல் நடந்தது. இதில் சங்கத்தின் புதிய தலைவராக என்.ராமச்சந்திரன் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். ஒலிம்பிக் சாசனப்படி தேர்தல் நடத்தப்பட்டதை அடுத்து இந்திய ஒலிம்பிக் சங்கம் மீதான சஸ்பெண்ட் நடவடிக்கை சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் நீக்கியுள்ளது.

## அடிதடி சண்டையில் நியூசிலாந்து வீரர்கள்



ஆக்லாந்தில் நடந்த முதலாவது டெஸ்டில் நியூசிலாந்து அணி 40 ஓட்ட வித்தியாசத்தில் இந்தியாவை தோற்கடித்து தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்த டெஸ்டுக்கான நியூசிலாந்து அணியில் நட்சத்திர பேட்ஸ்மேன் 29 வயதான ஜெஸ்சி ரைடர், 23 வயதான வேகப்பந்து வீச்சாளர் டக் பிரேஸ்வெல் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

இருப்பினும் களம் இறங்கும் ஆடும் லெவன் அணியில் இவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் ரைடரும், பிரேஸ்வெல்லும் அடிதடி சண்டையில் ஈடுபட்டது அம்பலமாகியுள்ளது. இவர்கள் இருவரும் ஆக்லாந்து டெஸ்ட் தொடங்குவதற்கு முந்தைய நாள் இரவில் அங்குள்ள பாருக்கு சென்று அதிகாலை மது அருந்தி கும்மாளம் போட்டுள்ளனர்.

போதை உச்சிக்கு ஏறிய நிலையில் திடீரென அவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, அது கைகலப்பில் முடிந்துள்ளது. இதில் ரைடருக்கு கையிலும், பிரேஸ்வெல்லுக்கு காலிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

இவர்களது நடத்தையை கண்டு கடும் கோபம் அடைந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் வாரியம் இது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகிறது. விசாரணையின் போது, இருவரும் தங்களுக்குள் சண்டை போட்டதை ஒப்புக் கொண்டுள்ளனர். இதையடுத்து அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உலகச் செய்திகள்

WORLD WATCH

## அமெரிக்காவை எச்சரிக்கும் வடகொரியா



கொரிய வளைகுடாவில் அமெரிக்கத் - தென் கொரியத் துருப்புக்களின் இணைந்த பலம் வாய்ந்த வருடாந்த இராணுவ போர்ப்பயிற்சி இந்த மாதம் இடம்பெறவுள்ளது. இந்நடவடிக்கையானது வட கொரிய அமெரிக்க உறவில் நிலவி வரும் முறுகல் நிலையை மேலும் அதிகரிக்கும் எனப்படுகிறது.

வட கொரிய சிறையில் கடும் துன்பத்தை அனுபவித்து வரும் அமெரிக்கப் பிரஜையான கெனித் என்பவரை விடுவிக்கும் முகமாக வட கொரியா வரவிருந்த அமெரிக்க இராஜதந்திரியின் பயணம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

சென்ற வருடம் மே மாதம் கொரியாவைப் பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்கப் பிரஜை கெனித்பே, வடகொரியாவிற்குத் தன் வியாபார நிமித்தம் பயணித்த போது, தாய் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயலில் ஈடுபடும் பயணம் அதுவெனக் குற்றஞ்சாட்டப்பட்டுப 15 வருட கடுங்கால தண்டணை விதிக்கப்பட்டது.வட கொரியா தன் அணு ஆயுதக் கொள்கைக்கு அமெரிக்காவைப் பணிய வைக்க, கெனித்தை பயன்படுத்த முயல்வதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு குற்றம் சாட்டியுள்ளது.

மிகுந்த பலப்பரீட்சையின் மத்தியில் வட தென்கொரிய மக்களின் அமைதியும், உலகை அச்சத்தில் ஆழ்த்தும் வட கொரிய அணு ஆயுதக் கொள்கையும் தீர்வுகளின்றி அரசியல் மேடையில் ஆட்டம் காண்கிறது.

## பிரான்ஸ் ஜனாதிபதி அமெரிக்காவுக்கு விஜயம்



பிரான்ஸ் ஜனாதிபதி பிரன்சுவா ஒலாண்ட் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார். ஈரான் விவகாரம், வர்த்தகம் மற்றும் காலநிலை மாற்றம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமாவுடன், அவர் இந்த விஜயத்தின் போது கலந்துரையாடியுள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்பின் முன்மாதிரியாக இரு தரப்பு பங்களிப்பை மேம்படுத்துவதற்கு இரண்டு நாட்டுத் தலைவர்களும் இதன்போது இணக்கம் தெரிவித்துள்ளனர். தேவேளை பிரான்ஸ் மற்றும் அமெரிக்க அரச தலைவர்கள் இன்றைய தினம் இரவு நேர விருந்து உபசாரத்திலும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## அதி நவீன ஏவுகணைகளை சோதித்தது ஈரான்



கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் இரண்டு ஏவுகணைகளை ஈரான் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. இந்த ஏவுகணைகள் 2,000 கி.மீ தொலைவுக்கு அப்பால் உள்ள இலக்குகளை தாக்கும் திறன் கொண்டவை. தரையில் இருந்து தரையில் மற்றொரு இலக்கை தாக்கக்கூடிய ஏவுகணை, விமானத்தில் இருந்து பாய்ந்து சென்று விமானத்தை தாக்கக்கூடிய ஏவுகணைகளும் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

மேலும் இந்த ஏவுகணைகள் பறக்கும் போது, எதிரிகளின் ரேடார் திரையில் தெரியாது.

## ஜேர்மனியில் நாசி கால ஓவியங்கள் கண்டுபிடிப்பு



ஜேர்மனியில் நாஜி கால கலைப்படைப்புகளில் 60 ஓவியங்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சி நடைபெற்று வந்த போது, 1930- 40 ஆண்டு காலகட்டத்தில் ஹில்டிபிராண்ட் குர்லிட் என்பவர் கலைப்படைப்புகளை விற்பனை செய்து வந்தார்.

அப்போது அரசு அதிகாரிகள், யூதர்களிடமிருந்து திருடிய மற்றும் சிதைந்ததாக கருதிய ஓவியங்களை இவரிடம் விற்பனைக்கு கொடுத்துள்ளனர். ஆனால் காலப்போக்கில் விற்பனையாகாமல் இவரிடமே இருந்த இவ்வோவியங்கள் தற்போது இவரது மகன் கோர்னிலியஸ் குர்லிட் வசித்துவரும் மியூனிச் வீட்டில் இருப்பது கலைப்பொருள் முதலீட்டாளர்களின் கவனத்திற்கு வந்தது.

இதனைதொடர்ந்து ஆஸ்திரியாவின் சால்ஸ்பர்க் வீட்டில் பிக்காசோ, ரெனோயர், மோனெட் போன்ற பழம்பெரும் ஓவியர்களின் 60 கலைப்படைப்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கோர்னிலியசின் தகவல் தொடர்பாளர் ஸ்டீபன் ஹோல்சிங்கர் தெரிவித்துள்ளார்.

இது யூதர்களிடமிருந்து திருடப்பட்ட கலைப்பொருட்களா என ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு திருடப்பட்டதாய் இருந்தால் உரியவர்களிடம் கலைப்பொருட்கள் திருப்பி கொடுக்கப்படும் என ஜேர்மனி அரசு குறிப்பிட்டுள்ளது.

## அல்ஜீரியாவில் விமான விபத்து : 103 பேர் பலி



அல்ஜீரியாவில் இராணுவத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று மலையின் மோதி வெடித்து சிதறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அல்ஜீரியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஆம் எல்போவாகி மாகாணத்தில் இராணுவ விமானம் ஒன்று மலையில் மோதி வெடித்து சிதறியதில் விமானத்தில் இருந்த அனைவரும், அதாவது 103பேர் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்த விமானத்தில் இராணுவ வீரர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பயணம் செய்ததாக தகவல் வெளியாகி உள்ளது. கான்ஸ்டன்டைன்-எல் போவாகி இடையே சென்றபோது தரையில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்துடன் இந்த விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தில் விபத்தில் சிக்கியதாக தகவல் வந்துள்ளது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு மீட்புக் குழுவும், அவசரஊர்தியும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## தேம்ஸ் நதி உடைந்ததால் ஊருக்குள் வெள்ளம்



பிரித்தானியாவின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. மிகப்பெரிய தேம்ஸ் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது, இதைத்தொடர்ந்து கரையோரம் இருக்கும் கிராம மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து கொண்டிருப்பதால், தேம்ஸ் நதியின் சில கரைகள் உடைந்து விட்டன. இதனால் இலண்டன் அருகேயுள்ள பெர்க்ஷர், சுர்கி ஆகிய நகரங்களுக்குள் வெள்ளம் புகுந்தது, அவை மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே அப்பகுதியில் 14 வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது, மக்கள் வசிக்கும் பகுதிகளில் 2 அடி உயரத்துக்கும் மேலாக தண்ணீர் தேங்கி நிற்கிறது, மீட்புப்பணிகள் மிக தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே வெள்ளம் பாதித்த பகுதிகளை பிரதமர் டேவிட் கமரூன், துணை பிரதமர் நிக்கிலாக் ஆகியோர் பார்வையிட்டனர், நிவாரண பணிகளை முடுக்கி விட்டனர். கடந்த 1980 மற்றும் 1990ஆம் ஆண்டுகளுக்கு பிறகு தற்போதுதான் தேம்ஸ் நதியில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கொடையாளியாக முதலிடம் பிடிக்கும் பேஸ்புக் நிறுவனர்



பேஸ்புக் நிறுவனர் மார்க் மார்க் ஜுக்கர் பெர்க் மற்றும் அவரது மனைவி பிரிஸில்லாசான் இருவரும் அதிக நன்கொடை வழங்கிய அமெரிக்கர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர். இந்த இளம் தம்பதி 2013 ஆம் ஆண்டு 97 கோடி அமெரிக்க டொலர்கள் சமூகப் பணிகளுக்காக நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

2013ஆம் ஆண்டு அதிக நன்கொடை வழங்கிய 50 பேர் பட்டியலை தி குரோனிக்கில் ஆப் பிலெந்தரபி இதழ் வெளியிட்டுள்ளது. இதில், முதலிடத்தில் சக்கர்பெர்க் மற்றும் அவரது மனைவி உள்ளனர். முதல் 50 இடங்களைப் பிடித்தவர்கள் மொத்தம் 770 கோடி அமெரிக்க டொலர்களை நன்கொடையாக அளித்துள்ளனர். மைக்ரோசொப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் மற்றும் அவரது மனைவி மெலிண்டா இருவரும் 18.13 கோடி அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

ஆனால், 2004 ஆம் ஆண்டு 330 கோடி அமெரிக்க டாலர்கள் வழங்குவதாக உறுதியளித்திருந்தனர். அத்தொகையில் இது கழிக்கப்பட்டுவிட்டது. அதிக தொகை கொண்ட முதல் 30 நன்கொடைகள் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. அதேசமயம், இத்தொகை பெரும்பாலும் ஆராய்ச்சி மற்றும் அறிவியல் துறைகளுக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது. கட்டிடங்களுக்காகக் கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது





பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்

## உடலில் ஒரு சொட்டு இரத்தம் கூட இல்லாமல் பிறந்த குழந்தை.....

கலிபோர்னியாவின் ஆரஞ்ச் நகரில் கடந்த மாதம், ஜெனிபர் ஜுரேஸ் என்பவருக்கு, குழந்தை ஒன்று பிறந்தது. பிரசவ காலத்திற்கு மூன்று வாரங்களுக்கு முன்பாகவே பிறந்த இக்குழந்தை, வெளிறிய நிலையில் காணப்பட்டது. சந்தேகம் அடைந்த மருத்துவர்கள் சோதனை செய்த பார்த்த போது, குழந்தையின் உடலில் ஒருதுளி இரத்தம் கூட இல்லை என்பது தெரியவந்தது.

மருத்துவர்களின் கணிப்பின் படி இக்குழந்தை கிட்டதட்ட 80 சதவிகித இரத்தத்தை தாயின் கர்ப்பத்திலேயே இழந்துள்ளது, இது கடுமையான இரத்த சோகையைக் குறிக்கிறது. பிரசவத்திற்கு மூன்று வாரத்திற்கு முன்பே, குழந்தையிடம் எவ்வித அசைவும் இல்லாததால் மருத்துவரை அணுகியுள்ளார் ஜெனிபர். இதனையடுத்து அறுவை சிகிச்சையின் மூலம் குழந்தையும், தாயும் காப்பாற்றப்பட்டனர்.

ஜெனிபரின் முன்னெச்சரிக்கையான நடவடிக்கையே அவரையும், அவரது குழந்தையையும் காப்பாற்றியுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இக்குழந்தை உயிருடன் பிறந்தது மிகப்பெரிய அதிசயமாக கருதப்படுகிறது, இக்குழந்தையை பரிசோதித்த பிறகே நேரடியாக கருவிலேயே இரத்த இழப்பு ஏற்பட்டுள்ளதை கண்டறிந்தோம் என சாரோன் பிலிகிரிம் என்ற நர்ஸ் தெரிவித்துள்ளார்.





## நம்பமுடியாத வளையும் சிற்பங்கள் .....



சீனாவைச் சேர்ந்த கலைஞரான Li Hongbo என்பவர் கடிதாசிகளைப் பயன்படுத்தி சிற்பங்களை உருவாக்கி அசத்தி வருகின்றார். பலரது கவனத்தையும் ஈர்த்துள்ள இவரது சிற்பங்கள் யாவும் வளையும் தன்மை அல்லது மீள்தன்மை கொண்டவையாக காணப்படுதல் விசேட அம்சமாகும்.

## கண்ணிமைக்கும் நேரத்தில் தகர்க்கப்பட்ட கோபுரம்

ஜேர்மனியின் பிராங்கபேர்ட் நகர்த்தில் இருந்த 40 வருட கால பழமையான கோபுரம் ஒன்று வெடி வைத்து தகர்க்கப்பட்ட காட்சிகளே இவை...




## வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள்





படங்கள்
இ.தர்சன்






ஐஸ்கிறீம் கோன் தயாரிக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு




தொடர்புகளுக்கு:- P.துரைராஜா
244B,தேக்கந்தோட்டம்,வவுனியா.
0770240341





Vanni Inn

email : vanni_inn@yahoo.com

Chinese, Indian, Sri Lankan Food available

HOTEL VANNI INN





A/C Room, Non A/C Room, Com Room
Quality Foods, Hall, Vachel Parking

2nd Cross Street, Vavuniya.

Tel : 024 2222074 , Fax : 024 2222074


இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 16.02.2014 அன்று வெளியிடப்பட்டது.